Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666




16 வது வருடத்தில்
# விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978



வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்



நதி 16 | பாலம் 04 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2006


காலமெல்லாம் வாழும் காதல் 12





இதயத்தின் இன்னொரு கதவு 13





இயக்குனர் Steven Spielberg 17


## TTC கட்டணங்களின் விலை அதிகரிக்கின்றது

இரண்டு வருடங்களுக்கு முன்னர் ஒருநாள் தனது சட்டைப் பை நிறைய போலியான TTC transit tokens களை வைத்திருந்த ஒருவர் ரொறொன்ரோவில் கைது செய்யப்பட்டார். அதன் பிறகு இரண்டு வருடங்களாக FBI ஏஜன்டுகள் நடத்திய புலனாய்வின் பின்னர் கடந்த வாரம் மூன்று சகோதரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களால் இதுவரை ஐந்து மில்லியன் போலி TTC transit tokens புழக்கத்தில் விடப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இதனால் ரொறொன்ரோ TTC இதுவரை பத்து மில்லியன் டொலர் வரை நட்டம் அடைந்துள்ளது.

இந்த போலி Token கள் அமெரிக்காவில் உள்ள Massachusetts company யின் மூலமாகத் தயாரிக்கப்பட்டு நயாகரா வழியாக கனடாவுக்கு கடத்தப்பட்டு வந்துள்ளது. இதே கம்பனிதான் Casino chips களை தயாரிக்கின்ற கம்பனியுமாகும்.

இந்த போலி Token களை விற்ற விற்பனையாளர்களும் இது தொடர்பாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். சுமார் 20 முதல் 30 விற்பனையாளர்கள் இது தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது.


தொடர்ச்சி 02ம் பக்கம்


# புலிகளின் நிபந்தனையை நிறைவேற்ற மகிந்த தயாரா?



ஜெனிவாவில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையிலான பேச்சு வார்த்தை பெப்ரவரி 22, 23இல் நடைபெறவுள்ளது. அந்த பேச்சு வார்த்தையில் கலந்து கொள்ள புலிகளின் சார்பில் பதினேழு பேர் கொண்ட குழு வெள்ளிக்கிழமை 17ம் திகதி கட்டு நாயக்கா விமான நிலையத்தில் இருந்து பயணமாவார் கள் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

இப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வதற்கு கிளிநொச்சியில் இருந்து பயணமாகும் புலிகளின் பேச்சுவார்த்தைக்குழு உறுப்பினர்களை ஏற்றிவர விசேட உலங்கு வானூர்தி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கிளி-நொச்சியில் இருந்து புறப்பட்டு கட்டுநாயக்கா விமான நிலையத்திற்கு இவர்கள் நேரடியாக அழைத்து வருவார்கள் என்றும் தெரியவருகின்றது.

இந்த பேச்சுவார்த்தையின் போது புலிகளின் முக்கிய கோரிக்கையாக இருக்கப்போவது 'இராணுவத்துடன் சேர்ந்து இயங்கும் ஆயுதக் குழுக்களை கட்டுப்படுத்த வேண்டும்' என்பதே. அந்தக் கோரிக்கையை நிறைவேற்ற தான் தயார் என்று இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச திங்கள் 'ரொய்ட்டர்' செய்தி நிறுவனத்திற்கு அளித்த பேட்டியின் போது தெரிவித்துள்ளார்.

'எமது பகுதியில் ஏதாவது ஆயுதக் குழுக்கள் இயங்கினால் அதை நாம் கட்டுப்படுத்துவோம். எந்தக் குழுவாகவும் இருக்கலாம். கருணா குழு என்றால் கூட அவர்கள் ஆயுதங்களுடன் இயங்குவது நிச்சயமாக கட்டுப்படுத்தப்படும்' என்று தனது பேட்டியில் மகிந்த உறுதியாகத் தெரிவித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

'நான் ஒரு சமாதான விரும்பி. யுத்தப்பிரியன் அல்ல' என்று கூறியுள்ள மகிந்த, தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டை நிராகரித்தும் கருத்துகள் வெளியிட்டுள்ளார். வடக்கு, கிழக்கு பிராந்தியம் தமிழர்களின் தாயக பூமி என்பதை மகிந்த இந்த பேட்டியில் நிராகரித்துள்ளார். அதேசமயம் அதிகாரத்தை தமிழ் மக்களுடன் ஒற்றையாட்சியின் கீழ் பகிர்ந்து கொள்ளத்தயார் என்றும் தெரிவித்துள்ளார்.


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)
Associate Broker
• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"
HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
HomeLife/GTA Realty Inc.

THINKING OF BUYING / SELLING
HomeLife GTA Realty Inc.
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி
DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd.
Suite #206, Toronto

# "தொடர்கிறது கனவு இல்லம்"

நான் இந்தியாவில் வங்கி ஒன்றில் பணிபுரிந்த காலத்தில் பல ஊர்களிலும் பணியாற்ற சந்தர்ப்பம் கிடைத்தது. மதுரை, சென்னை, புதுடில்லி, மும்பை என்று பல நகர்களிலும் பணிபுரிந்தேன். ஒவ்வொரு ஊரிலும் அதிகபட்சம் ஐந்து அல்லது ஆறு ஆண்டு காலம் பணியாற்றியிருப்பேன். இக்கால கட்டங்களில் என்னுடைய பொழுது போக்குகளில் ஒன்று அந்தந்த ஊர்களில் நிலவும் வீட்டுமனை, கட்டிடம் போன்றவற்றின் விலைவாசி நிலவரங்களையும், கடந்த கால சந்தை நிலவரங்களையும் பிறர் மூலம் கேட்டும், நேரில் பார்த்தும், செய்தித்தாள், நூல்கள் வழியாக அறிந்ததும் வருவதாக இருந்தது. இதன் அடிப்படையில் ஏதாவது ஓர் இடம் அல்லது வீட்டை விலைக்கு வாங்க முற்படுவேன். வீடு என்று போகுமுன், நான் சொந்தமாகப் போடும் பணம் குறைவாகவும், நிதி நிறுவனங்களிடமிருந்து பெறும்தொகை மிகக் கூடுதலாகவும் இருக்கும். இவ்வாறு புதுடில்லியில் இரண்டு இலட்சத்துக்கு வாங்கிய வீடு ஒன்றை எட்டு ஆண்டுகள் கழித்து பன்னிரண்டு இலட்சத்துக்கு விற்றேன். சென்னையில் ஒன்றரை இலட்சத்துக்கு வாங்கிய வீடு ஒன்றை பதினைந்து ஆண்டுகள் கழித்து பதினெட்டு இலட்சத்துக்கு விற்றேன். இடைப்பட்ட காலத்தில் சென்னை வீடு எனக்கு மாதந்தோறும் வாடகை வருமானத்தையும் தந்தது.

## வாழ்வில் வெற்றி பெற

இதே முறையை கனடாவில், ரொறொன்ரோவில் கையாண்டு வெற்றி பெற்ற பல மனிதர்களை நான் சந்திக்க நேரிட்டது. குறிப்பாக இரு பெண்களைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஒருவர் தாதி (நர்ஸ்)யாகப் பணியாற்றுகிறார். இவருடைய பொழுது போக்கு புதிய வீடுகளை விடுமுறை நாளில் ஆராய்வதே ஆகும். எந்தெந்த கட்டிடக்காரர்கள் எந்தெந்த இடங்களில் வீடு காட்டுகிறார்கள் என்ற விவரம் இவருக்குத் தெரிந்திருக்கும். அவர்கள் கட்டும் வீடுகளின் தரம், அவற்றிற்குச் சந்தையில் இருக்கக்கூடிய மதிப்பைப் பற்றியும் இவருக்குத் தெரிந்திருக்கும். இவர் தன்னுடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் இடத்தையும், வீட்டையும் தேர்ந்தெடுத்து முன்பணம் கொடுப்பார். முன்பணம் இருப்த்தைந்தாயிரம் டொலர் என்று வைத்துக் கொள்வோமே. பிறகு கட்டி முடித்து கடைசித் தொகை தரும் நேரத்தில் மற்றவர்களுக்கு விற்று விடுவார். இவ்வாறு கட்டி முடிக்க ஆனகாலம் இரண்டு ஆண்டுகள் என்று வைத்துக் கொள்வோமே. இதில் அவருக்குக் கிடைத்த இலாபம் இருபத்தைந்தாயிரம் என்றால், அவருக்கு இரண்டு வருடத்தில் கிடைத்த இலாபம் நூறுசதம். ஆனால் இப்பெண்மணி என்னிடம் கூறிய கூற்றின் படி ஒரு விற்பனையில் இவர் ஈட்டிய இலாபம் 75 ஆயிரம் டொலர், மற்றொன்றில் 25ஆயிரம் டொலர். இவர் தன்னுடைய கடன் சரிதத்தை கண்போல் காத்து வந்தார் என்பதும், தேவையான முன்பணத்தையும் வங்கிகளில் லைன் ஆப் கிரிடிட் மூலமே பெற்றுக்கொடுத்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. வாழ்நாளில் இவர் நூறு ஆயிரம் டொலர் சேமிக்க வேண்டும் என்றால் எவ்வளவு காலம் சென்றிருக்கும்? சற்றே யோசித்து பாருங்கள்.

மற்றொரு பெண்மணி, இள வயதினர், திருமணமாகாதவர். ஆனால் மிகவும் சுறுசுறுப்பானவர். கெட்டிக்காரர். இவர் வங்கி ஒன்றில் பணிபுரிகிறார். இவருடைய பொழுது போக்கு விலைக்கு வரும் பழைய வீடுகளைப் பற்றிய விவரங்களை இணையதளத்தில் பார்ப்பதே. பிறகு "திறந்த இல்லம்" 'open house' தினத்தில் தனக்குப் பிடித்த வீடுகளை நேரில் சென்று பார்வையிடுவார். சுற்றுப்புறத்தை ஆராய்வார். அந்தவீடு இருக்கும் அமைவிடத்தையும் 'Location', புதிய குடிவரவாளர்களுக்கும் ஏற்ற இடமா என்றும் ஆராய்வார். அதாவது அந்த வீட்டிலிருந்து ரொறொன்ரோ மத்திய பகுதிக்குப் போவது என்றால் ஒரே பஸ் அல்லது ரயிலில் போகக்கூடிய சாத்தியக் கூறுகள் எவ்வாறு உள்ளன என்றும் பார்ப்பார். பிறகு வங்கி ஒன்றை அணுகி வீட்டுக்கடனுக்கு விண்ணப்பிப்பார். முன்பணம் போடுவதற்கான வசதி இவரிடம் உள்ளது. வங்கி இவருக்குக் கடன் தரத்தயார் என்றவுடன் வீட்டை வாங்க முனைவர். இவ்வாறு இதுவரை வெற்றி கரமாக இரண்டு வீடுகளை வாங்கி நல்ல இலாபத்திற்கு விற்று விட்டதாக கூறுகிறார்.

"தாமதமாக ஆரம்பித்து, விரைவில் பணக்காரர் ஆகுங்கள்" (Start late, finish rich) நூலின் ஆசிரியர் டேவிச் பச் கூறுவதையும் சற்றே கேட்போம்.

"நான் கலிபோர்ணியாவில் வேலை செய்த ஆரம்பகாலத்தில் என்னுடைய நண்பருடன் சேர்ந்து ஆளுக்கு 12,500 டொலர் (மொத்தம் 25 ஆயிரம் டொலர்) போட்டு, 220,000 டொலருக்கு முதல் வீட்டை வாங்கினோம். அந்தக் காலகட்டத்தில் வீட்டுக் கடன் கட்ட மிகவும் சிரமப்பட்டேன். என்னுடைய வருமானம் போதுமானதாக இல்லை. இதை என் தந்தையிடம் கூறிய போது அவர் சொன்னார் உன்னை ஊக்குவிக்கக் கூடிய சிறந்த சக்தி (Motivation) வீட்டை இழந்து விடுவோமோ என்ற பயம்தான்". மூன்றாண்டுகள் கழித்து இந்த வீட்டை 225,000 டொலர்களுக்கு விற்றோம். மூன்றாண்டு காலத்தில் நாங்கள் இலவசமாக வசித்தோம். ஆனால் எங்களுக்குக் கிடைத்த இலாபம் 5,000 டொலர் தான். ஆனால் எங்களிடம் இந்த வீட்டை வாங்கியவர் பல ஆண்டுகளுக்குப் பிறகு 700,000 டொலருக்கு விற்றார்.

என்னுடைய இரண்டாவது வீட்டை சான்பிரான்ஸிஸ் கோவில் 640,000 டொலருக்கு வாங்கினேன். இரண்டே வருடத்தில் இந்த வீட்டை 900,000 டொலருக்கு விற்றேன். இப்போது எனக்குக் கிடைத்ததோ வரிக்குட்படாத இலாபம் 260,000 டொலர்.

ஒருவருடத்திற்குப் பிறகு நியூயோர்க் நகரில் இரண்டு மில்லியனுக்குச் சற்றே கூடுதலாக ஒரு கொண்டோ இல்லத்தை வாங்கினோம். இப்போது அந்த வீட்டின் மதிப்பு 50சதம் கூடியுள்ளது. தற்சமயம் நானும், எனது மனைவியும் இந்த வீட்டையும் விற்று விட்டு சிறிய வீடு ஒன்றை வாங்கிக்கொண்டு இலாபத்தை மிச்சப்படுத்தலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

**பெரி. முத்துராமன்**

ஆக இந்தியாவோ, கனடாவோ, இல்லை அமெரிக்காவோ, கவனத்துடன் ஆராய்ந்து வீட்டில் செய்யப்படும் முதலீடு பலபேருக்கு நன்மையையே பெருத்த இலாபத்தையே தந்து வந்திருக்கின்றது என்று பார்த்தோம்.

இந்த எல்லா முதலீடுகளின் பின்னாலும் சில அடிப்படை விதிகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவற்றைக் கையாண்டவர்கள் அவற்றைத் தெரிந்து கையாண்ட சம்பவங்களும் உண்டு. தெரியாமல் கையாண்ட சம்பவங்களும் உண்டு.



அந்த அடிப்படை விதிகள் என்னென்ன? அவற்றை இனிவரும் இதழ்களில் பார்ப்போம்.


Scotiabank

**Mortgage advice**
You can trust

We offer innovative mortgage solutions to help you:
• Access equity in your home • Reduces your borrowing costs
• Lower your monthly payment
For details call: Perrii Muthuraman, MBA, M. Comm, PFP
Senior Personal Banking Officer
Direct Line - 416.439.3040 Ext. 2008 Fax: 416.439.5544
periakaruppan.muthuraman@scotiabank.com
Cedarbrae Mall, 3475 Lawrence Ave. E, Scarborough, ON, M1H 1B2


# TTC கட்டணங்களின் விலை அதிகரிக்கின்றது

01ஆம் பக்கத்தொடர்ச்சி

*இந்த விசாரணைகளின் பின்னர் TTC தனது புதிய token களை இந்த வருட இறுதியில் அறிமுகம் செய்யும் என்று அறிவித்துள்ளது. இது முன்னைய Token களைவிட பாதுகாப்பானது என்று கூறப்படுகின்றது.*

*1954ம் ஆண்டு இந்த Token கள் அறிமுகம் செய்யப்பட்டதின் பின்னர் முதல் முறையாக இவை மாற்றம் செய்யப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதே சமயம் TTC தனது டோக்கன், ரிக்கற், மற்றும் மாதாந்த சீட்டுகளின் விலையை அதிகரிக்கின்றது.*

*இந்த விலை அதிகரிப்பு ஏப்ரல் மாதத்தில் இருந்து அமுலுக்கு வருகின்றது. ஒவ்வொரு ரோக்கனும், ரிக்கற்றும் பத்து சதத்தால் அதிகரிக்கப்படுகின்றது. அதே சமயம் காசு போட்டு பயணம் செய்ய விரும்பினால் 25 சதம் அதிகமாய் செலுத்த வேண்டும் (இனிமேல் $2.75 செலுத்த வேண்டும்).*

*மாணவர்கள், குழந்தைகளின் ரிக்கற்களுக்கும் இனிமேல் மேலதிக பணம் செலுத்த வேண்டும். TTC யின் வாராந்த பயணச் சீட்டுக்கு மட்டும் விலை மாற்றம் எதுவும் இல்லை.*




விளம்பரம்
VLAMBARAM

விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.



**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிகேஷன்ஸ். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.



Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com



HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

# இறுக்கப்பட்ட மத உணர்வுகளை மீறும் கலைபிரக்ஞை

போன மாதம் தில்லியில் நடந்த ரங்க் மஹோத்ஸவ் (நாடகப் பெருவிழா) வுக்குப் போயிருந்தேன். கடந்த சில ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும், தில்லியில் இருக்கும் தேசிய நாடகப் பள்ளி (National School of Drama) பதினைந்து நாட்கள் நீடிக்கும் நாடக விழாவை நடத்தி வருகிறது.

அதற்கு இந்தியாவில் உள்ள ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் எல்லா மொழிகளிலிருந்தும், சிறப்பான, புதிய நாடகங்களுக்கு அழைப்பு தரப்படுகிறது. இதன் மூலம் ஆங்காங்கே நாடகத்துறையில் நிகழும் மாற்றங்களை, புதிய சோதனைகளை, பள்ளி மாணவர்களும் ஆசிரியர்களும், நாடக ரசிகர்களும் அறிய ஒரு வாய்ப்பு ஏற்படுகிறது. அத்தோடு அந்நாடகங்களைப்பற்றி அறிந்து கொள்ள மற்றவர்களுக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. இவ்விழ-ாவிற்கு, இந்தியா மட்டுமல்ல, சுற்றியிருக்கும் நாடுகளின் நாடக முயற்சிகளுக்கும் அழைப்பு தரப்படுகிறது.

அவ்வாறு பங்களா தேசத்திலிருந்து வந்த ஒரு நாடகம் அதிர்ச்சியையும் எதிர்பாராத மகிழ்ச்சியையும் தருவதாக இருந்தது. சம கால அரசியல் சமூக நிகழ்வுகளின் இடையில், நினைவில் மனதில் ஆழ்ந்திருக்கும் வரலாற்று பண்பாட்டு பிரக்ஞை மேலெழுந்து தன்னை வெளிப்படுத்திக்கொள்வது எப்படி நிகழ்கிறது என்பது புரியவில்லை.

## வெங்கட் சாமிநாதன்

உலகெங்கிலும் முஸ்லீம் சமுதாயங்களிடையே வலுத்து வரும் தீவிர அடிப்படைவாதம் (funadamdentalist extremism) பங்களா தேசத்திலும் தலையெடுத்துள்ளது மட்டுமல்லாமல் இன்றைய அரசின் கூட்டணியிலும் யாரும் கட்டுப்படுத்த முடியாத அல்லது கட்டுப்படுத்த விரும்பாத அங்கம் வகிக்கும் பலமும் பெற்றுள்ளது. மத அடிப்படையில் பிரிந்து ஒரு முஸ்லீம் நாடாகத் தன்னைப் பிரகடனப்படுத்திக் கொண்டாலும், பங்களா தேசத்தின் மொழிப்பற்றும் வேறுபட்ட வரலாறும், அது தன்னை பாகிஸ்தானின் அடியொற்றியாக இருக்க விரும்பவில்லை.

வங்க மொழிப் பற்று உருது மொழியை ஏற்க மறுத்தது. இரண்டாவதாக தன் வரலாற்றின் கலந்து பட்ட குணத்தை அது மறக்க அழிக்க மறுத்தது. அது ஒரு காலம். முப்பது வருடங்களுக்கு முந்தைய நிகழ்வு. மொழிப் பற்றே கிழக்கு பாகிஸ்தானை பங்களா தேசமாக்கிற்று.

இந்திய முஸ்லீம்கள் ஒரு நாடாக ஒன்று படுவர் என்று பிரகடனப்படுத்தப்பட்டாலும், பஞ்சாபிகள் மேலாதிக்கம் செலுத்திய ராணுவமும், அரசியல் அதிகாரமும், மற்ற மொழியினரை தமக்கு சமதையாக அங்கீகரிக்க மறுத்து இரண்டாம் தர பிரஜைகளாக வங்காளிகளை நடத்தியதால் வந்த பிரிவினை தான் பங்களா தேசம். அந்த மேலாண்மையிலிருந்து வங்காள முஸ்லீம்கள் விடுதலை பெற்றதும், முஸ்லீம் தீவிர வாதம், தன் இருப்பை நியாயப்படுத்த புதிய பகைவனைத் தேடி மீண்டும் தலையெடுத்துள்ளது. அது முஸ்லீம் அல்லாத மற்ற எதையுமே பகைமையுடன் பார்க்கும் மனப்பான்மையாக உருவெடுத்துள்ளது.

என்னென்ன காரணங்களால் பகைமை என்பதை விட பகைமையே காரணங்களைத் தேடும், உருவாக்கிக் கொள்ளும் பகையாக இத் தீவிர வாதம் உருப்பெற்றுள்ளது. இந்தியா-இந்து என்பதையே சகித்துக் கொள்ள முடியாத பகைமை. இது ஒன்றுபட்ட வரலாற்றையே மறுக்கும் தீவிர வாதம். முஸ்லீம் அல்லாத, முஸ்லீமுக்கு முந்திய வரலாற்றையே மறுக்க முடியுமா என்ன? அதைத் தான் இத்தீவிர வாதம் செயல்படுத்த முயல்கிறது. இத்தீவிர வாதம் மக்கள் தொகையில் ஒரு சிறு பான்மையினரின் குரலே ஆன போதிலும், உரத்த குரல் எழுப்பி, வன்முறையாக செயல்படும் குணத்தால், அதுவே சமூகம் முழுமைக்குமான குரலாக தன்னை ஆக்கிக்கொள்ளும் வல்லமையும் பெற்று விடுகிறது. மௌனித்திருக்கும் பெரும்பான்மை தீவிரவாதத்தின் வன்முறையிலும் உரத்த சத்தத்திலும் தன் இருப்பை இழந்து விட்டதாகிறது. தீவிர வாதம் தன்னிலிருந்து வேறுபட்ட அதன் இருப்பையும் அங்கீகரிக்க மறுத்து அதைக் குரல் இழக்கச் செய்துவிடுகிறது. அப்படி உரத்து ஒலிக்காது மௌனித்திருந்த குரல் ஒன்று தன் இருப்பை இழந்துவிட்டதோ என்று எண்ணும் வேலையில் நாட்டின் எல்லை கடந்து, ஒரு கலையின் வெளிப்பாடாக பல்கலைக் கழக வெளிப்பாடாக நம் முன் காட்சி தந்து உறவாடும் போது, இன்னும் உயிர்த்திருக்கும் இதன் வலிமை என்ன, என்று கவலையுடன் யோசிக்கத் தோன்றுகிறது. இதன் எதிர்காலம் என்னவாக இருந்தாலும், இது இன்னும் உயிர்த்திருப்பது, இப்போதைக்கு நமக்கு மகிழ்ச்சி தரும் விடயம்.



விடயத்திற்கு வருவோம். பங்களா தேசத்திலிருந்து வந்த நாடகம், பே்ஹுலார் பான். பேஹு்லா என்ற விதவைப் பெண் மூழ்கும் கதை என்று பொருள் படும். பேஹு்லா என்ற கதை பத்ம புராணம் அல்லது மனஸா மங்கள் என்ற பாரம்பரிய 15-ம் நூற்றாண்டிலிருந்து, 18-ம் நூற்றாண்டு வரை புழங்கிய கதைப் பாடலிலிருந்து பெற்ற கதையாகும். இப்பாடல்கள் மங்கள காவ்யா என்னும் இலக்கிய வகையைச் சேர்ந்தது.

இக்கதைப்பாடல் ஜாத்ரா வகையான, பாடலும் ஆடலும் சேர்ந்த கிராமிய நாடகமாக நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது. ஜாத்ரா என்னும் பக்தி ரசம் கொண்ட புராணக் கதைகளை நிகழ்த்திக்காட்டும் வங்க நாடகமரபு பழைமையானது. இதன் பிரபல்யம் காரணமாக, இந்திய வங்கத்தில், சமீபத்திய பழைமையில் இடது சாரிகள் தம் அரசியல் பிரச்சாரத்திற்கும் ஜாத்ரா வழிவகுத்தது.

ஆனால் ஜாத்ரா புராணக்கதைகளையே நடிக்க எடுத்துக் கொள்ளும் பாரம்பரிய கதை இரண்டு பெண்களைப் பற்றியது. ஒருத்தி மனஸா அவள் சிவனுக்கு உறவு அற்றுப் (ille-gitimate) பிறந்த பெண். ஆனாலும் தெய்வம். கோர ரூபம் கொண்டவள். சீற்றமே அவள் குணம். ஆனால் அவளிடம் பக்தி செலுத்தினால் கருணை வடிவானவள். காளி போன்று. ஆனால் அவள் பிறப்பு மூலம் சந்தேகத்திடமானதால், அவள் கணவனால் கைவிடப்பட்டவள். அதனால் இழந்த தன் தெய்வீகத்தைத் திரும்ப பெற சூழ்ச்சிகள் செய்து கொண்டிருப்பவள். சிவனைப் பழி வாங்கும் சூழ்ச்சி ஒன்றில் சிவனின் பக்தனான சௌதாகர் என்பவனின் மகன் லமீந்தர், பேஹு்லாவை மணம் செய்து கொண்டதும் அவனை நாகம் தீண்டி சாகச் செய்துவிடுகிறாள். மணம் ஆன நாளே விதவையாகிவிட்ட பேஹு்லா மற்ற பெண்களைப்போல சம்பிரதாயப்படி இறந்த கணவன் உடல் வைக்கப்பட்டிருக்கும் சிதையில் தானும் குதித்து சதியாகிவிடவில்லை. ஒரு படகில் கணவனின் உடலைக் கிடத்தி, வாழ்க்கை என்னும் நதியைக் கடக்கிறாள். நதியின் ஒவ்வொரு திருப்பத்திலும் அவளை தீய சக்திக-ளான ஆண்கள் அவளுக்கு பல சங்கடங்களைத் தருகின்றனர். ஆனால் அவற்றையெல்லாம் எதிர்த்து மீண்டு சிவன் வாழும் உலகம் அடைந்து சிவனின் அருள் பெற்று தன் கணவன் உயிரை மீட்கிறாள். ஆனால் இத்தகைய உயிரை மீட்டுக்கொள்ளும் தெய்வீக செயலாற்றியவள் மனிதர் வாழும் உலகில் வாழ முடியாதாகையால், உயிர் மீண்ட கணவனோடு சொர்க்கத்திலேயே வாழும் தகுதி பெறுகிறாள் என்பது புராணம். பாரம்பரிய புராணம் கவிதையாக எழுதப்பட்டு சொல்லப்பட்டும் ஜாத்ரா நாடகமாக நடிக்கப்பட்டும் வந்த கதை.

இக்கதைப்பாடலின் மூலப்பிரதி நாராயன் தேவ், பிஜய் குப்தா, கேடக தாஸ், மாநந்தா, பிப்ரதாஸ் பிப்பிலாய், பெய்ஸ் காபி, தந்திர விபூதி ஆகியோரின் பல வேறுபட்ட பாடங்களைக் கொண்டது. அதனிலிருந்து ஜாத்ரா நாடகத்திற்காக ஒரு நாடகப் பிரதியை உருவாக்கியது, டாக்கா பல்கலைக் கழகத்தின் நாடக, இசைப்பிரிவைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள், நடிகர்களான பிப்லொப் பாலா, ஃபரீதா அக்தர் லிமா, தானியா சுல்தானா, நஹிதா சுல்டன சதி, சையதுர் ரஹ்மான் லிபோன், அபூர்பா குமார் ராய், ரொகிபுல் ஹஸன் ஆகியோர். இந்த நாடகப் பிரதி சில மாற்றங்களைக் கொண்டது. காரணம், இப்பல்கலைக்கழக நாடகப்பிரிவின் நோக்கங்கள், திட்டங்கள் பாற்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளும் நாகரிகங்களும் ஒரு கிராமமாக ஒன்றுபட துவங்கிய காலகட்டத்தில் பங்களா தேச சமூகம் வன்முறையாலும், ஏழ்மையாலும் பலவா-றாக பிளவு பட்டும், தன்னுள் முரண்பட்டு சிதற-ிக்கொண்டிருக்கும் போது, பல்வேறு இழைகளால் உருவானதால் துண்டாடப்பட்டுக் கிடக்கும் வரலாற்றுச் சிதைவுகளிலிருந்து பங்களா தேசத்தில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் மர்மா, சக்மா, மணிபுரி, சந்தால், காரோ இனமக்களோடு இந்துக்களும், முஸ்லீம்களுமான வங்காளிகளையும் ஒரே பாவும் ஊடுமாக ஒன்றிணைத்து, உலகோடு உறவாடச் செய்வது எவ்வாறு என்று ஒரு புதிய வரலாற்றைக் காணும் முயற்சியில், வெறும் சித்தாந்தங்களை அறியும் இடமாக மட்டுமல்லாமல், அதை வாழும் பிரச்சினையின் வெளிப்பாடும் மொழியுமாகக் காண்பது இவர்களது செயல்பாடும் கல்வியும் எனக் காண்கிறது இந்நாடகப் பிரிவு. வாழ்க்கையைக் கொண்டாடும் வழிமுறையாக நாடகம் என்பது இவர்கள் கனவும் நினைவும் என்கிறார்கள் இந்நாடகக் குழுவினர்.

இதற்கேற்ப பேஹு்லார் நாடகப் பிரதி சில மாற்றங்களைக் கண்டுள்ளது. அதை நம்முன் விரியும் நாடகக் காட்சிகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம். சுற்றி பார்வையாளர்கள் அமர்ந்திருக்க மேடை அரங்கத்தின் மத்தியில் உயர்ந்த தளத்தில் எழுப்பப்பட்டிருக்கிறது. இது மரபார்ந்த ஜாத்ரா நாடக மேடைதான். வழக்கமாக தரையில் வெளிப்புறத்தில் சுற்றி அமர்ந்திருக்கும் பார்வையாளருக்குத் தெரிய ஆளுயரத்தில் வட்டமான மேடை இருக்கும். பல திசைகளிலிருந்து பார்வையாளர் மத்தியிலிருந்து நடிகர்கள் மேடைக்கு வருவார்கள். இங்கு மாற்றியமைக்கப்பட்ட மத்திய மேடையைச் சுற்றி கீழே சுமார் இருபது இருபத்தைந்து நடிகர்களும், வாத்தியங்கள் வாசிப்பவர்களும் காவியுடை அணிந்து அமர்ந்து பாடுகிறார்கள். நடிகர்கள், வாத்தியம் வாசிப்பவர்கள், இசை அமைப்பாளர்கள் பெரும்பாலும் முஸ்லீம்கள். அவர்களில் கணிசமான எண்ணிக்கையில் இந்துக்களும் இருக்கிறார்கள். நாடகம் பெரும்பாலும் பாடல்களாலும் ஒரு சில இடங்களில் சிறு வசனங்களுடனும் நிகழ்த்தப்படுகிறது. பல நூற்றாண்டுகள் பாரம்பரியமாக வந்த பாடல்கள். மத்தியில் எழுப்பப்பட்டிருக்கும் மேடையில் காவியுடை அணிந்த தலைவிரிகோலமாக பாடும் பெண், பேஹு்லா. வைக்கோலால் ஆன பொம்மை தான் பேஹு்லாவின் கணவன், லக்மீந்தரின் சடலம். முதலில் வந்தனம் பாடப்படுகிறது. அதாவது கடவுள் வணக்கம். அது சரஸ்வதி, மனஸா, முகம்மது நபியின் மகளான ஃபதீமா, அல்லா, எல்லா முஸ்லீம் ஞானிகள், நான்கு திசைகள், சூரியன், தர்மம், ஆதாம், ஹாவா (ஏவாள்), இன்றைய நடிகர்களின் குருக்கள், பார்வையா-ளர்கள், பின் மனித குலம் முழுமைக்கும் பிரார்த்தனை செய்துகொள்வதான பாடல், வந்தனம்.

பின் பேஹு்லா மணமான தினத்தன்றே கணவன் சர்ப்பம் தீண்டி சாக, தான் விதை-வயாகிவிட்ட விதியை நொந்து தன் வேதனையைப் பாடுகிறாள். அடுத்து, இறந்த லக்மீந்தரின் தந்தை சாட் சௌதாகர் மேடையேறி, தன் மகனின் சாவுக்கு பேஹு்லா தான் காரணம் என்று பழி சுமத்துகிறான். நாடகம் முழுதும், சுற்றியிருக்கும் கோரஸ் கதையைப் பாடிக கொண்டே இருப்பார்கள். இந்தப் பாடல் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. சுமார் இரண்டு மணி நேரம் நிகழ்ந்த இந்நாடகம் முழுதும் கோஸ்டியினர் பாடாத கணங்கள் மிகக் குறைவு. அவர்கள் பாடும் முறையும் மிக உணர்ச்சி வசப்பட்டது. அவர்கள் முகங்களையே நான் பார்த்துக் கொண்டிருந்தேன் என்று சொல்ல வேண்டும். அவ்வளவு உக்கிரமான முக பாவனையோடு, அதை வேதனையின் வெளிப்பாடு என்பதா, சீற்றத்தின் வெளிப்பாடு என்பதா அல்லது ஒரு வெறியின் வெளிப்பாடு என்பதா என்று தெரியவில்லை. ஒரு கணம் கூட தளர்ச்சியடையாத, உரத்த குரலில், ஒன்று சேர எல்லோரும் வெறி பிடித்த இரண்டு மணி நேரம் தொடர்ந்து பாடி பார்வையாளரை உணர்ச்சி கொப்பளித்த நிலையில் மாறாது பிரமை பிடிக்க வைத்திருந்தது எனக்கு புதிய அனுபவம்.




APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL


# ஒன்ராரியோ மாகாணத்தில் உள்ள வாகன சாரதி அனுமதிப்பத்திரங்களின் வகைகள்

ஒன்ராரியோ மாகாணத்தில் மொத்தமாக பல்வேறு வகையான வாகனங்களையும் செலுத்துவதற்காக பன்னி ரண்டு வகையான சாரதி அனுமதிப் பத்திரங்கள் உள்ளன. ஒவ்வொரு சாரதி அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவரும் பல்வேறு வகையான சட்ட ஒழுங்குகளுக்கு அமைய பின்வரும் வாகனங்களை வீதிகளில் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர்.

பின்வரும் இவ் அட்டவணையில் இருந்து, ஒவ்வொரு சாரதி அனுமதி பத்திரங்களின் வகையினரும், அவர்கள் அச்சாரதி அனுமதிப் பத்திரங்களை சொந்தமாக வைத்திருப்பவர்கள் மூலம் எந்தவகையான வாகனங்களை ஓட்ட தகுதியானவர்கள் என்பதுடன், அச்சாரதி அனுமதிப் பத்திரங்களை வைத்திருப்பவர்கள் ஏனைய எந்த சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கு தகுதியானவர்கள் என்ற புள்ளி விபரங்களும் இங்கு அட்டவணைப்படுத்தப்பட்டு தரப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்ட தகவலின் அடிப்படையில் பார்க்கும் போது ஒரு குறிப்பிட்ட சாரதி அனுமதி பத்திரத்தினை பெற்றவர் ஏனைய பல சாரதி அனுமதி பத்திரங்களுக்கு சமனான வாகனம் ஓட்டும் அங்கீகாரம் இருப்பதால், அந்த வகையான பத்திரம் பெற்றுகொள்ளத் தேவையில்லை. உதாரணமாக "B" வகுப்பு சாரதி அனுமதிபத்திரம் வைத்திருப்பவர் "A" வகுப்பு சாரதி அனுமதி பத்திரம் உபயோகித்து செலுத்தும் பாரிய வண்டிகள் (Trucks), மற்றும் மோட்டார் சயிக்கிள் தவிர மிகுதி எந்த வாகனமும் செலுத்தலாம்.

தொடரும்



- எஸ். எஸ். மாதவன்
Home - 905.209.0507
Cell - 416.939.4913

| Class or Licence<br>சாரதி அனுமதிப் பத்திரவகைகள் | Types of Vehicles Allowed<br>ஓட்ட தகுதியான வாகனங்கள் | May also Drive Vehicle in other class<br>ஓட்ட தகுதியான ஏனையசாரதி அனுமதிப்பத்திரவகைகள் |
|---|---|---|
| A | Any Tractor - Trailer or Combination of motor vehicle and towing vehicles when the towed vehicles exceed a total gross weight of 4,600 kg.<br>பாரிய ட்றக் வண்டிகள், பாரிய வாகனங்களை கட்டி இழுத்து செல்லும் வண்டிகள் என 4,600 கி.கி மேற்பட்ட வகைகள். | ii & G |
| B | 24 பேர் அல்லது அதற்கு மேல் உட்காரும் ஆசனங்களுக்கு மேற்பட்ட பாடசாலை பேரூந்து வகைகள் (School bus) | C, ii, E, F & G |
| C | 24 பேர் உட்காரும் ஆசனங்களுக்கு மேற்பட்ட சாதாரண பிரயாணிகள் பேரூந்து வண்டிகள் | D, F & G |
| D | 11,000 கி.கி மேற்பட்ட ட்றக் வண்டிகள், மற்றும் 4,600 கி.கி மேற்படாத ஏனைய வண்டிகளை இழுத்து செல்லும் வண்டிகள் (Small towed vehicle) | G |
| E | ஆக கூடுதலாக 24 நபர்களுக்குள் உட்கார்ந்து செல்லும் சிறிய பாடசாலை பேரூந்து வண்டிகள் (School bus) | F & G |
| F | ஆக கூடுதலாக 24 பிரயாணிகளை ஏற்றிச்செல்லும் ஆசனங்களை கொண்ட பேரூந்து வண்டிகளும் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகள் | G |
| G | சாதாரண எந்த ஒரு கார், சிறிய வான் சிறு ட்றக் வண்டிகள் 11,000கி.கி உட்பட்ட வண்டிகள், மற்றும் 4,600கி.கி மேற்படாத ஏனைய வண்டிகளை இழுத்து செல்லும் வண்டிகள். (Small towed vehicle). அதாவது பொதுவாக யாவரும் வைத்திருக்கும் சாரதி அனுமதிப்பத்திரம். | |
| G2 | தற்காலிக குறிப்பிட்ட வருடங்களுக்கு மட்டும் "G" சாரதி அனுமதிப் பத்திரத்துக்கு சமமான தகுதியான நிலையில் வழங்கப்படுவது. இதிலும் 19 வயதிற்குட்டவர்களுக்கும் சில பிரத்தியேகமான கட்டுப்பாடுகள் வாகனம் ஓட்டுபவரின் குருதியில் மதுபானத்தின் அளவு என்பது அறவே இருக்கக் கூடாது என்பது ஒரு சிறுவிதி விலக்கு. | |
| G1 | "G" வகுப்பு சாரதிகள் கட்டும் வாகனங்களை இன்னொருவரின் உதவியுடன் வாகனம் ஓட்டக் கற்றுக் கொள்வதற்காக வழங்கப்பட்ட சாரதி அனுமதிப்பத்திரம் முதன் முதலாக வாகனம் ஓட்டுபவரின் ஆரம்பம் இங்கு இருந்தே தொடங்குகின்றது. | |
| M | மோட்டார் சைக்கிள், மோட்டார் ஸ்கூட்டர் எந்தவொரு மோட்டார் இயந்திரம் பொருத்தப்பட்ட சைக்கிள் செலுத்தும் சாரதி அனுமதி பத்திரம். | |
| M2 | தற்காலிகமாக குறிப்பிட்ட சில வருடங்களுக்கு மட்டும் "M" வகுப்பினர் செலுத்தும் மோட்டார் சைக்கிள்களைச் செலுத்தும் அனுமதிப் பத்திரம். மதுபானம் என்பது இவ் அனுமதிப் பத்திரத்தில் மோட்டார் சைக்கிளை ஓட்டுபவர் அறவே அருந்தியிருக்கக் கூடாது. | |
| M1 | சில விதிகளுக்கு அமைய மோட்டார் சைக்கிளை ஓட்டிப் பழகும் அனுமதிப் பத்திரம். | |

**வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?**

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள். முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997







- No Spraying
- No Smelling
- No Moving

**HOUSE FOR SALE**

MORNINGSIDE & STAINES

5 அறைகள் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு. 4 குளியலறைகள்.
புறம்பான வழியுடன் bsmt அமைக்கப்பட்டுள்ளது.

- 5 bedrooms
- 4 bashrooms
- 9ft. ceiligs
- hardwood floors
- Upper level laundry,
- Separate entrance to bsmt.
- Steps to school, TTC

Mattamy Staines New Development.

- Price $449,000

மேலதிக தகவல்களுக்கு: 416.292.0557

**ELECTRICAL WORKS**




FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை. வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880

**TELE MARKETERS தேவை**

Mississauga நகரில் உள்ள Financial Planner க்கு Tele Marketers தேவை. வேதனமும், Commission உம் வழங்கப்படும்.



மேலதிக விவரங்களுக்கு: 416.294.4855
416.741.7377 Ext. 3722





# ‘சோதிடம் மூடநம்பிக்கை இல்லவே இல்லை’

**Astrology Related SOFTWARE DEVELOPER**

**கிருஷ்ணா சிவப்பிரகாசம் அவர்களுடன் சுவையான விவாதத்தோடு ஒரு சந்திப்பு**

*ஜாதகத் திரட்டு (Hindu Astrology - Horoscope) விவாக இணைப்பு (Marriage Match Pro), நல்ல நாள் (Muhurtham, The Auspicious Timer ), பஞ்சாங்க கணிப்பு (Hindu Almanac Maker Pro) போன்ற பல மென்பொருட்களை (Software) தமிழிலும் ஆங்கிலத்திலும் உருவாக்கிய திரு. கிருஷ்ணா சிவப்பிரகாசம் அவர்களுடனான நேர்காணலில் சோதிடம் பற்றிய பல தகவல்களை பெறுகிறோம்.*

*திரு. கிருஸ்ணா சிவப்பிரகாசம் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்தேன். அவரும், அவரது துணைவியாரும், பிள்ளைகளும் இன்முகத்தோடு வரவேற்று உபசரித்ததார்கள். இந் நேர்காணலுக்கு தமது நேரத்தை ஒதுக்கித் தந்தமைக்காக, முதலில் “விளம்பரம்” பத்திரிகை சார்பாக எனது நன்றியைக் கூறிக் கொள்கிறேன்.*

*சந்திப்பவர் : அருண்*

சாதகம், முகூர்த்தம், திருமணப் பொருத்தம், பஞ்சாங்கம் போன்ற பல சோதிட விடயங்களை, மென்பொருளாக தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அமைத்திருக்கிறீர்கள். இந்த எண்ணம் உங்களுக்கு எப்படி ஏற்பட்டது?

எனக்கு 12 வயதாக இருக்கும்போதே சோதிடத்தில் ஓர் ஆர்வம் ஏற்பட ஆரம்பித்தது. வீட்டிலே பல நூற்றுக்கணக்கான சோதிட நூல்கள் இருந்தன. அவற்றைப் படித்து அந்த அறிவினை வளர்த்துக்கொண்டேன். எனது பேரனாரிடம் இருந்தும் பல விடயங்களைக் கற்றுக் கொண்டேன். அறிஞர்களைச் சந்திக்கும்போது புதிய விடயங்களை கேட்டு அறிந்து கொண்டேன். கற்றுக் கொண்ட கல்வி வீணாகுதல் கூடாது என்பதற்காக இவற்றை கணினி மென்பொருளாக தமிழிலும் ஆங்கிலத்திலும் அமைத்தேன்.

சோதிட விடயங்களில் பல முரண்பாடுகள் உண்டு என்று சொல்வார்கள். அவற்றை எப்படி உங்கள் மென்பொருளில் சரிசெய்தீர்கள்?

முரண்பாடு என்பது சோதிடத்தில் இல்லை. அதன் பாவனையிலும் அணுகுமுறையிலும்தான் உள்ளது. அவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கையிலும் இந்தியாவிலும் உள்ள சோதிட ஆய்வாளர்களை தொடர்பு கொண்டு, சில சமயங்களில் விவாதித்து, தர்க்கத்துக்கு அமைய விதிகளை தரம்பிரித்து கோவைப்படுத்திய பின்னர் மென்பொருளை உருவாக்கினேன். பஞ்சாங்க வித்தியாசங்கள், கொள்கைகள் போன்றவற்றை தெரிவு செய்யும் வகையில் (options) கொடுத்து சோதிட ஆய்வுப் பரப்பினை மேலும் விஸ்தீரணமாக்கியிருக்கிறேன்.

நீங்கள் முற்போக்கு தன்மையுள்ள எழுத்தாளராக இருந்தீர்கள். மூடநம்பிக்கை என்று சிலரால் கருதப்படும் சோதிடத்தை எப்படி ஏற்றுக் கொண்டீர்கள்? இந்த முரண்பாட்டுக்கு என்ன பதில் சொல்வீர்கள்?

சோதிடம் என்பது ஆய்வுக்குரிய ஒரு துறை. அடிப்படையில் மூடநம்பிக்கை அல்ல. ஆனால் தற்காலத்தில் அது மூடநம்பிக்கை ஆக்கப்பட்டிருக்கிறது என்றுதான் நான் கருதுகிறேன். சோதிடத்தை மூடநம்பிக்கை என்று கூறுபவர்கள் சோதிடத்தின் அடிப்படையை சரியாக அறியாதவர்கள். இவர்கள் சோதிடம் என எதைக் கருதுகிறார்கள் என்று தெரியுமா? சோதிடர்கள் என்று தம்மைத்தாமே அழைப்பவர்கள் கூறுவதைத்தான் சோதிடம் என்று நினைக்கிறார்கள். சோதிடம் என்னும் “துறைசார் கல்வி” பற்றி இவர்கள் அறிய முற்பட்டதில்லை. சோதிடர்கள் தங்கள் வருமானத்துக்காக சொல்வதை - செய்வதை - எழுதுவதை அடிப்படையாக வைத்து சோதிடத்தை எடைபோடுகிறார்கள். இதுதான் முதல் தப்பு! சோதிடக் கல்வி அறிவு எதுவும் இல்லாமல் வெறும் வார்த்தை ஜாலத்தில் சோதிடராக உலாவுபவர்களையும் பார்த்திருக்கிறோம். தெருவிலே கிளியை வைத்து “தாம் நினைத்தபடி” கூறும் சோதிடரையும் பார்த்திருக்கிறோம். இவர்களை அளவுகோலாக வைத்து கருத்துக் கூறும்போது, சோதிடம் மூடநம்பிக்கை ஆக்கப்பட்டிருக்கிறது. யாரோ வருமானத்துக்காக, ஒரு “துறைசார் கல்வி”யை கொச்சைப்படுத்தி சுரண்டுகிறார்கள் என்பதற்காக அந்தத் துறையைச் சாடுவது பொருத்தமல்ல. சோதிடத்துறையின் தர்க்கம் நிறைந்த விதிகளைக் கற்றபின்னர், சோதிடம் மூடநம்பிக்கை என்று கூறியவர்கள் எவரும் இல்லை.

“சோதிட துறைசார் கல்வி” என்று நீங்கள் குறிப்பிடுவது எதை? அப்படி ஒன்று இருக்கிறதா?

முதலில் சோதிடம் என்ற சொல்லின் கருத்தை உணரவேண்டும். சோதிடம் என்று கூறப்படும் 300க்கு மேற்பட்ட வித்தியாசமான விடயங்கள் உலகில் உண்டு. தமிழர் மத்தியில் பாவனையில் உள்ள “சாதக அடிப்படையிலான” சோதிடம் பற்றி மட்டும் இங்கு நான் குறிப்பிடுகிறேன். மேலைத்தேச சாதக சோதிடத்தின் அடிப்படைத் தன்மைக்கும் நமது சோதிட அடிப்படைக்கும் மிக வித்தியாசம் உள்ளது. முதலில் அந்த வித்தியாசத்தை கவனித்துக் கொள்ளுங்கள். இதைப் புரிந்து கொள்ளாமல் ஆங்கில சோதிட புத்தகங்களை படித்துவிட்டு தமிழர்களின் சோதிடம் பற்றி கருத்துக்கூறிய அறியாமைகளையும் நான் கண்டிருக்கிறேன். எமது சோதிட விதிகள் கோர்வைப்படுத்தாத முறையில் இப்பொழுதும் உள்ளன. சங்கேதமுறை (மறை பொருள்) கொண்ட விதிகளும் உள்ளன. இவை எவையும் ஒழுங்காக இதுவரை தொகுக்கப்படவும் இல்லை, பகுக்கப்படவும் இல்லை, பகுப்பாய்வு செய்வதில் நிலையான அணுகுமுறையை எழுத்து வடிவில் எவரும் உருவாக்கியிருக்கவும் இல்லை. பகுப்பாய்வு முறைகள் பரம்பரை பரம்பரையாக செவிவழியாகவே சொல்லப்பட்டு வந்திருக்கிறது.

சோதிட விதிகளை கோர்வைப்படுத்தி, விஞ்ஞான முறையில் பரிசோதிக்க முடியாதா?

சோதிட விதிகளை கோர்வைப்படுத்த சோதிடரும் விரும்பவில்லை - காரணம் தம் தொழில் பறிபோகலாம் என்ற அச்சம். சமயவாதிகளும் விரும்பவில்லை. சில விடயங்களை இரகசியமாக வைத்திருப்பது அவசியம் என்பது அவர்கள் கருத்து. விஞ்ஞானிகளும் விரும்பவில்லை. சோதிடம் விஞ்ஞானத்துக்கு ஒத்துவராது என்ற தீர்மானப் போக்கு. அரசாங்கங்களும் விரும்பவில்லை. காரணம் விஞ்ஞானிகளின் போக்குக்கு மாறாக எதையும் செய்ய விரும்புகிறார்கள் இல்லை. அது மட்டுமல்ல. தமிழர் சோதிட விடயங்களை கோர்வைப் படுத்தி ஆராய்வது என்பது தனிமனித காரியம் இல்லை. சோதிடத்தினை கோர்வைப்படுத்தி ஆராயப்படாமல் சோதிடம் மூடநம்பிக்கை என்று எவரும் எழுந்தமானத்தில் கூறி விடமுடியாது.

சோதிடத்தை கோர்வைப்படுத்தினால் அது விஞ்ஞானத்தால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று நினைக்கிறீர்களா?

பரிசோதிக்கப்பட முடியாதவற்றை விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளாது என்பது விஞ்ஞானத்தின் வரைவிலக்கணத்தில் உள்ளது. சோதிடத்தில் கூறப்படும் விடயங்கள் பரிசோதனைக்கு உட்படுத்துவது இலகுவான காரியமல்ல.

ஏன் பரிசோதனைக்கு உட்படுத்த முடியாது? இது ஒரு நழுவலாக தெரிகிறதே!

சோதிட விதிகள் ஆயிரக்கணக்கான மாறும் கணியங்களைக் (variables) கொண்டவை. இந்த மாறும் கணியங்கள் எதுவும் மனிதனின் கட்டுப்பாட்டில் இல்லை. விதிகளைப் பரீட்சிக்கும்போது, மாறும் சிலவற்றை மாறாமல் வைத்துக்கொண்டே பரிசோதனை செய்யலாம். சோதிடத்தில் அது எப்போதுமே சாத்தியமல்ல. உதாரணமாக செவ்வாய் கிரகம் தெரிவிக்கும் தாக்கங்களை பரிசோதிக்க, மற்றக்கிரகங்களின் நிலையை மாறிலியாக வைத்தே பரிசோதிக்கலாம். மற்றக் கிரகங்கள் அசையாமல் நாம் செய்யமுடியுமா? சோதிடம் என்பது மனிதனால் மாற்றவோ எளிதில் பரிசோதிக்கவோ முடியாத காரணிகளில் தங்கியிருப்பதால், விஞ்ஞானத்தின் வரையறைக்குள் வராது. தனது வரையறைக்குள் வராத ஒரு விடயம் பற்றி விஞ்ஞானம் கருத்துக்கூறுவது பொருத்தமும் அல்ல.

விஞ்ஞானம் கருத்துக்கூற முடியாது என்று எப்படிக்கூறுகிறீர்கள். சற்று விளக்குங்கள்.

சோதிட பரிசோதனை செய்ய மற்ற கிரகங்களின் அசைவினை சற்று நேரம் நிறுத்தி தாருங்கள் என்றால் விஞ்ஞானிகளால் அந்த பரிசோதனைத் தளத்தினை தர முடியுமா? பரிசோதனைத் தளத்தினையே இலகுவில் ஏற்படுத்த முடியாத நிலை விஞ்ஞானத்துக்கு இருக்கிறபோது, அந்தப் பரிசோதனையின் விளைவில் தங்கியிருக்கும் சோதிடக் கல்வி பற்றி எப்படி எழுந்தமானமாக முடிவு சொல்லலாம்!

சோதிடக் கலையின் ஆரம்ப கர்த்தா யார் என்று சொல்வீர்களா?

கிரேக்க தத்துவஞானிகளிடம் இருந்து இது தோன்றியதாக மேலைத்தேசத்தவர் கூறுகின்றனர். அவர்களிடம் இருந்து ஆரியர்கள் மூலமாக தமிழருக்குள் சோதிடம் நுழைந்ததென்று இவர்கள் கூறுகின்றனர். நுட்பமாக ஆராய்ந்து பார்த்தால் தமிழர்தான் சோதிட அறிவின் ஆரம்பகர்த்தாக்கள் என்பதற்கு பல ஆதாரங்கள் உண்டு. சோதிடத்தில் கூறப்பட்ட பல விடயங்களை ஆரியர்களும், கிரேக்கர்களும் கூற முன்பதாக தமிழர்கள் கூறியுள்ளனர். தமிழர்களின் பாவனையில் உள்ள சோதிடத்தின் பஞ்சாங்க கணிப்பு “லங்கா” என்னும் மத்தியை உடையதாக காணப்படுகின்றது. அதை பின்னர் வட இந்தியாவின் உஜ்ஜைனி என்ற இடத்துக்கு ஆரியர்கள் மாற்றியமை அப்பட்டமாக தெரிகின்றது. தமிழ் இலக்கியங்களிலும் ஆதாரங்கள் உண்டு. இதுவரையிலும் கண்டுபிடிக்கப்பட்ட ஆதிகால சாதகங்களில் பரிபாடலில் கூறுப்பட்ட சாதகமே விஞ்ஞான கணிப்புக்கு நிகரானது என ஆராய்வுகள் காட்டுகின்றன. பக்கச் சார்பின்றி ஆராய்ந்தால் தமிழர்களே சோதிடத்தின் மூலகர்த்தாக்கள்.

தனி மனித இயல்புகளுக்கும் அவனது அன்றாட வாழ்க்கை நிகழ்வுக்கும் நவக்கிரக அமைப்பு நிலையும் அக்கிரகங்களுக்கே இடையிலான ஈர்ப்புத் தொடர்புகளும் காரணமாக இருக்கின்றன என சோதிடம் சொல்வதற்கான விளக்கம் என்ன?

இந்துக்களின் சோதிடம் தப்பான முறையில் அர்த்தப்படுத்தப்படுகின்றது. ஈர்ப்புத் தொடர்புகள்தான் மனிதனின் வாழ்க்கையை மாற்றிச் செல்கிறது என்று யார் சொன்னது? இந்து சோதிடத்தில் அப்படி ஒரு விளக்கமும் கூறப்படவில்லையே. சோதிட நம்பிக்கை யில்லாதவர்கள் தாங்களாகவே ஒரு அர்த்தத்தை உருவாக்கிவிட்டு அது பற்றி தாமே விமர்சித்து சோதிடத்தின் அடிப்படையை களங்கப்படுத்துகின்றனர். சில சோதிடர்களும் தாம் விஞ்ஞான அடிப்படையில் சோதிடம் சொல்வதாக காட்டிக் கொள்ள இவ்வாறு தப்பான அபிப்பிராயங்களை விதைத்துள்ளனர். மனிதனின் பாவ புண்ணியங்கள் சுட்டிக்காட்டப்படும் வகையில் அவன் பிறக்கும் நேரத்தினை இயற்கை (இறைசக்தி) தீர்மானிக்கிறது.


கிரக ஈர்ப்பினையும், பாவ புண்ணியங்களையும் தொடர்புபடுத்தி மனிதன் பிறப்பிக்கப்படுகிறான் என்கிறீர்கள். செயற்கையாக மனிதன் பிறக்கும் நேரத்தை மாற்றமுடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இங்கு உங்கள் கருத்து தவறாகி விடுகிறதே. உங்கள் பதில் என்ன?

உலக இயக்கத்தின் ஒரு சிறுதுளிதான் விஞ்ஞானத்துக்கள் அடங்கியிருக்கிறது. நமது அறிவுக்குள் அடங்கியிருக்கிறது. பாவ புண்ணியங்கள் எவ்வாறு மனித வாழ்வுடன் இணைக்கப்படுகின்றன என்பது யாரும் அறியாத ஒன்று. ஆராய்வுக்கு அப்பாற்பட்ட ஒன்று. பிறக்கும் நேரத்தை மாற்றமுடியம் என்பது உண்மைதான். ஆனால் இயற்கையாக பிறப்பிக்கப்படவிருந்த நேரம் மாறாது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் “இலக்கின நிச்சயம்”’ என ஒரு விடயம் சோதிடத்தில் உண்டு. இதன் மூலம் ஓரளவு குழந்தையின் பிறப்பு கிரகநிலையை அறியலாம் எனினும், செயற்கையாக பிறப்பிக்கப்பட்ட பிள்ளைகளின் கிரகநிலையின் சரிபிழை விவாதத்துக்கு உரியது. பிறக்கும் குழந்தை செயற்கை முறையில் பிறப்பிக்கப்பட வேண்டும் என்பதும் விதியின் விளையாட்டு என்று சில சோதிடர் கூறுவது குதர்க்கம் என்றே நான் நினைக்கிறேன்.

பிறந்த நேரத்துக் கிரகநிலை நடந்து முடிந்ததாகின்றதே. அது எப்படி பிற்கால வாழ்க்கையின் மாதிரிப் படமாக அமைய முடியும்? அதாவது சாதகக்குறிப்பு எப்படி இதற்கு உதவுகிறது?

உதாரணமாக, கணினிக்குள் வின்டோஸ் என்னும் இயக்கும் மென்பொருளை ஸ்தாபித்து ஆரம்பிக்கிறோம். அதனை அடிப்படையாகக் கொண்டுதான்

தொடர்ச்சி 22ஆம் பக்கம்



**வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.**

பரம்ஜி - **416.230.1107**

**PARAM GNANASWARAN**
Associate Broker

**HOME LIFE GTA REALTY INC.** Real estate Brokers
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
**416.321.6969**

Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
**905.712.2666**

paramg@gmail.com

# விளையாட்டுத் தகவல்கள் 184

## அவுஸ்திரேலிய OPEN 2006 - ரெனிஸ்

மெல்போர்னில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில், உலகின் முதல்நிலை வீரர் ரோஜர் ஃபெடரருக்கு சவாலாக விளங்கப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. இந்த ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான அவுஸ்திரேலிய ஓபன், விமரிசையுடன் நடைபெற்றது. அதிலிருந்து, நடப்பு சாம்பியன் மாரட் சபின், உலகின் இரண்டாம் நிலை வீரர் ரஃபேல் நடால், எட்டுமுறை கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ள ஆந்த்ரே அகஸ்ஸி ஆகியோர் காயம் காரணமாக விளையாடவில்லை. இந்நிலையில் இப்போட்டிக்குத் தரநிலையில் முதலிடத்தைப் பிடித்துள்ள சுவிற்சலாந்து வீரர் ரோஜர் ஃபெடரருக்கு நிகரான போட்டி அளிக்கப்படுமா என்ற கவலை அமைப்பாளரிடம் எழுந்தது.

தரநிலை - அவுஸ்திரேலிய ஓபன் போட்டித் தர நிலையில் முதல் 10 இடங்களைப் பெற்றுள்ள வீரர்கள் விபரம். ரோஜர் ஃபெடரர், ஆன்டி ராடிக், லேடன் ஜூவிட், டேவிட் நல்பாண்டியன், நிகோலே டேவிடென்கோ, கில்லர்மோ கோரியா, இவான் லுபிசிக், காஸ்டன் காடியோ, ஃபெர்ணான்டோ கோன்சாலஸ், தோமஸ் ஜோஹன்சன்.

மகளிர் பிரிவி - மகளிர் பிரிவில் அமெரிக்காவின் லிண்ட்சே டேவன் போர்ட் தர நிலையில் முதலிடத்தில் உள்ளார். இந்தியாவின் சானியா மிர்சா 32வது இடத்தில் உள்ளார். அவுஸ்திரேலியா ஓபன் ரெனிஸ் போட்டியின் முதல் சுற்றிலேயே அதிர்ச்சித் தோல்வியைத் தழுவினார் அமெரிக்காவின் வீனஸ் வில்லியம்ஸ்.

### எஸ். கணேஷ்

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற ஆட்டத்தில் பிரெங்கோவா வீனஸ் வில்லியம்ஸைத் தோற்கடித்தார். நடப்பு விம்பிள்டன் சாம்பியனான வீனஸ், இப்போட்டித் தரநிலையில் 10வது இடத்தில் இருந்தார். அவர், 94வது இடத்தில் உள்ள பிரெங்கோவாவிடம் முதல் சுற்றிலேயே தோல்வியைத் தழுவியது, ரெனிஸ் வட்டாரத்தில் அவருக்கு தலைகுனிவை ஏற்படுத்தியுள்ளது. கடினமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வீனஸ் வென்றார். ஆனால், இரண்டாவது செட்டில் பல்கேரிய வீராங்கனையின் ஆட்டம் அற்புதமாக அமைந்திருந்தது. மூன்றாவது செற் ஆட்டம் ரசிகர்களுக்கு மிகவும் விருந்து படைத்திருந்தது. 12வது சர்வீஸ் கேமை இழந்தது வீனஸின் தோல்விக்குக் காரணமாக அமைந்தது. 'பேக் ஹேண்ட்' மூலம் பந்தைத் திருப்பியபோது, நெற்றில் பந்து இறங்கியது. மொத்தத்தில் 65 முறை தானாகவே தவறுகளை இழைத்துக் கொண்டார் வீனஸ். மூன்றாவது செற் ஆட்டத்தில் மட்டும் 41 முறை தானாகவே தவறுகள் செய்தார். இரண்டுமணி 28 நிமிடம் இந்த ஆட்டம் நீடித்தது.

மூன்றாவது முறை - 34 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் விளையாடியுள்ள வீனஸ், பெரிய அளவிலான போட்டிகளில் முதல் சுற்றிலேயே தோல்வியுறுவது இது மூன்றாவது முறை. இதற்கு முன்னதாக 1997 ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியிலும், 2001ஆம் ஆண்டு பிரெஞ்சு ஓபன் போட்டியிலும் முதல் சுற்றிலியே தோல்வியைத் தழுவியுள்ளார் அவர். சைப்ரஸ் வீரர் மார்கஸ் பாக்ததிஸிடம் அதிர்ச்சித் தோல்வியைத் தழுவி, அவுஸ்திரேலிய ஓபன் போட்டியிலிருந்து வெளியேறினார் அமெரிக்காவின் ஆன்டி ராடிக்.

20 வயதாகும் பாக்ததிஸ் ஆன்டி ராடிக்கின் பட்ட வாய்ப்பை கனவாக்கினார். இருவரும் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் இல்லை என்பது போல விளையாடினர். ராடிக் 15முறை 'ஏஸ்' சர்வீஸ்களைப் போட்டார். அவரைக் காட்டிலும் கூடுதலாக ஒரு 'ஏஸ்' சர்வீஸைப் போட்ட பாக்ததிஸ், 26 முறைதானாக தவறுகளை இழைத்தார். அதேசமயம் ராடிக் 31முறை தானாக தவறுகளை இழைத்தார்.

வெற்றி பெற்ற பாக்ததிஸ் ஜூனியர் உலக சாம்பியன் என்பது குறிப்பிடத்தக்கது. இப்போட்டித் தரநிலையில் இரண்டாம் இடத்தில் இருந்தார் ராடிக். அதேசமயம் வெற்றி பெற்ற பாக்ததிஸ் உலகத் தரவரிசையில் 54வது இடத்தில் உள்ளவர்.

அவுஸ்திரேலிய ஓபன் - ரோஜர் பெடரர் சாம்பியன் கலப்பு இரட்டையரில் பூபதி - ஹிங்கிஸ் ஜோடி சாம்பியன் அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் ஆடவர் ஒற்றையர் பிரிவில், சுவிற்சலாந்து வீரர் ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார். மெல்போர்னில் நடந்த இந்த இறுதிப்போட்டியில் பட்டத்தை கைப்பற்ற ரோஜர் பெடரரும், மார்கோஷ்பாக்டாசும் மோதினர். இப்போட்டி சுமார் இரண்டுமணி 46 நிமிடத்தில் முடிந்தது. இந்த பரபரப்பான இறுதிப்போட்டியில் உலக முதல்தர வீரரான ஃபெடரர் 5-7, 7-5, 6-0 என்ற செட்கணக்கில் சைப்ரஸ் வீரரை வென்றார். இது ரோஜர் ஃபெடரர் வென்ற ஏழாவது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும். தவிர இரண்டாவது அவுஸ்திரேலிய ஓபன் பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. 2003ஆம் ஆண்டு விம்பிள்டன் போட்டியில் ரோஜர் ஃபெடரர் முதன்முறையாக கிராண்ட் ஸ்லாம் பட்டத்தை வென்றார். அதன்பிறகு அவர் பங்கேற்ற அனைத்து கிராண்ட் ஸ்லாம் போட்டியிலும் பட்டம் வென்றிருக்கிறார். தவிர பெடரர் தொடர்ந்து மூன்று கிராண்ட் ஸ்லாம் பட்டங்களையும் வென்று சாதனை படைத்திருக்கிறார். இதற்கு முன்பு பீற் சாம்பராஸ் 1994ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய ஓபனை வென்றதன் மூலம் விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் பட்டங்களை வென்று ஃபெடரர் தற்போது இந்த ஆண்டின் முதலாவது கிரண்ட் ஸ்லாமான அவுஸ்திரேலியா ஓபனை வென்றிருக்கிறார். இங்கு ஏழாவது பட்டத்தை வென்றதன் மூலம் இதற்கு முன்பு இந்தச் சாதனை படைத்த மாவீரர்களான மெக்கன்ரோ, ஜோன் நியூகோம்ப் மற்றும் மேட்ஸ் விலாண்டர் ஆகியோருடன் சாதனையாளர் பட்டியலில் ஃபெடரரும் இடம் பெற்றுவிட்டார்.

அமெரிக்க வீரரான பீற் சம்பராஸ் இதற்கு முன்பு மொத்தம் 14 கிராண்ட் ஸ்லாம் பட்டங்களை வென்று முத்திரை பதித்தார். ஃபெடரர் தற்போது அவரது சாதனையையும் நெருங்கி வருகிறார். 24 வயதான ஃபெடரருக்கு ஒட்டு மொத்தத்தில் இது 35வது பட்டமாகும். தவிர 20 வயதான பாகடாடிசுக்கு எதிரான 4ஆவது வெற்றி ஆகும். சைப்பிரஸ் நாட்டைச் சேர்ந்த மார்கோஸ் பாக்டாடிஸ் முன்னணி வீரர்கள் பத்துபேரை வென்று முதல் முறையாக கிராண்ட் ஸ்லாம் போட்டிக்கு தகுதி பெற்றார்.



அவுஸ்திரேலிய ஓபன் ஆடவர் ஒற்றையர் பட்டத்தை வென்ற பெடரருக்கு முதல் பரிசாக 9,000 அமெரிக்க டொலர் பரிசாக கிடைத்தது. இதன் மூலம் அவரது ஒட்டுமொத்த பரிசுத்தொகை 21,274,573 அமெரிக்க டொலராக உயர்ந்தது. இதற்கு முன்பு 1976ஆம் ஆண்டு இங்கு 212 வது நிலை வீரரான அவுஸ்திரேலியாவின் மார்க் எட்மாண்ட்சன் பட்டம் வென்றார்.

இப்போட்டியில் பங்கேற்கும் போது 54வது நிலை வீரராக இருந்த பாக்டாடிஸ் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றதன் மூலம் 26வது இடத்திற்கு முன்னேறியிருக்கிறார். அவுஸ்திரேலிய ஓபன் கலப்பு இரட்டையர் பிரிவில் மகேஷ் பூபதி - மார்டினா ஹிங்கிஸ் ஜோடி பட்டத்தை கைப்பற்றியது. இரட்டையர் பிரிவில் ஸ்பெசலிஸ்டான இந்தய முன்னணி வீரர் மகேஷ் பூபதிக்கு இது 10வது கிராண்ட் ஸ்லாம் பட்டமாகும். தவிர கலப்பு இரட்டையரில் மூன்றாவது பட்டமாகும். மெல்போர்ன் பார்க்கில் உள்ள ராட்லேவர் பகுதியில் கலப்பு இரட்டையர் பிரிவிற்கான இறுதிப்போட்டி நடந்தது. இதில் இந்தியவீரர் மகேஷ் பூபதி, சுவிற்சலாந்து வீராங்கனையான மார்டினா ஹிங்கிசுடன் இணைந்து, கனடா - ரஷ்யா இணையை சந்தித்தனர். இந்த பரப்பான ஆட்டத்தில் பூபதி - ஹிஸ்கிஸ் ஜோடி அபாரமாக ஆடி டேனியர் நெஸ்டார் - எலீனா லிகோட்செவா இணையை வீழ்த்தி பட்டத்தை வென்றது. இப்போட்டியில் கனடாவில் டேனியல் நெஸ்டார், ரஷ்யாவின் எலீனாவிகோட்செவா ஜோடி ஆறாம் நிலை ஜோடியாக கணிக்கப்பட்டிருந்தது. பூபதி - ஹிங்கிஸ் ஜோடி தகுதிநிலை பெறாத ஜோடியாக இருந்தது. இந்தப் பட்டம் பூபதிக்கு ஆறாவது கலப்பு இரட்டையர் பட்டமாகும். வெவ்வேறு ஆறு வீராங்கனைகளுடன் இணைந்து அவர் பட்டம் வென்றிருக்கிறார். கடந்த வருடம், மேரிபியர்ஸ் மற்றும் டேனியலா ஹண்டுசோவா ஆகிய வீராங்கனைகளுடன் இணைந்து மகேஷ் பூபதி விம்பிள்டன் மற்றும் அமெரிக்க ஓபன் பட்டங்களை வென்றது நினைவு கூரத்தக்கது. முன்னதாக 1997 ஆம் வருடம் ரிகாஹிராகியுடன் இணைந்து பிரெஞ்சு ஓபன் பட்டத்தை கைப்பற்றினார். ஜப்பான் வீராங்கனை அய்சுஜியாமாவுடன் இணைந்து 1999 ஆம் வருடம் அமெரிக்க ஓபன் பட்டத்தை வென்றார். 2002 ஆம் ஆண்டு ரஷ்ய வீராங்கனை எலீனாவிகோட்செவாவுடன் இணைந்து விம்பிள்டன் கலப்பு இரட்டையர் பட்டத்தை தனது வசமாக்கினார் பூபதி. இந்தப் போட்டியில் எலீனா எதிரணியில் ஆடினார். இரட்டையர் பிரிவில் நிபுணரான மகேஷ் பூபதி, தனது ரெனிஸ் வாழ்க்கையில் இதுவரை நாலு ஆடவர் இரட்டையர் பட்டங்களை வென்றிருக்கிறார். காயம் காரணமாக மூன்றுவருட இடை வெளிக்குப்பிறகு ஆடவந்துள்ள சுவிற்சலாந்து வீராங்கனை மார்டினா ஹிங்கிசுக்கு இந்தப் பட்டம் ஒரு பரிசு என்றால் அது மிகையில்லை. இந்தப்பட்டம் சுவிற்சலாந்து வீராங்கனையான ஹிங்கிசுக்கு 15வது பட்டமாகும். கலப்பு இரட்டையர் பிரிவில் முதல்பட்டமாகும். தவிர முன்னணி ரெனிஸ் வீராங்கனைகளில் ஒருவரான மார்டினா ஹிங்கிஸ் தனது ரெனிஸ் வாழ்க்கையில் ஐந்து ஒற்றையர் பட்டங்களையும் வென்றது குறிப்பிடத்தக்கது.


### அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ்
### மௌரிஸ்மோ சாம்பியன் பட்டம் வென்றார்

அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டியில் ஹெனின் ஹார்டனேயை வாழ்த்தி மௌரிஸ்மோ கிராண்ட் ஸ்லாம் பட்டம் வென்றார். மெல்போர்னில் அவுஸ்திரேலிய ஓபன் ரெனிஸ் போட்டிகள் நடைபெற்று வந்தன. மகளிர் ஒற்றையர் பிரிவு ஆட்டத்தில் அமலியா மௌரிஸ்மோ மற்றும் ஹெனின் ஹார்டனை ஆகியோர் மோதினர். இறுதி ஆட்டம் என்பதால் ஆரம்பம் முதலே ஆட்டம் விறுவிறுப்பாக இருந்து. பிரான்சு நாட்டு வீராங்கனையான மௌரிஸ்மோ அபாரமாக ஆடி வென்றார்.

அடுத்த இரண்டாவது செட்டிலும் மௌரிஸ்மோ கை ஓங்கியிருந்தது. அவர் பெல்ஜியம் வீராங்கனையான ஹெனினை விட முன்னிலையில் இருந்தார். அப்போது ஹெனினுக்கு திடீரென வயிற்றுவலி ஏற்பட்டது. இதனால் ஹெனின் தொடர்ந்து விளையாட முடியாமல் தவிர்த்தார். சிறிது நேரம் போராடி பார்த்த ஹெனின் தான் போட்டியிலிருந்து விலகிக் கொள்வதாக அறிவித்தார். அதனால் மௌரி ஸ்மோ வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இறுதியில் 6-1,2-0 என்ற செற் கணக்கில் மௌரிஸ்மோ வென்றார். பிரான்ஸ் நாட்டு வீராங்கனையான அமலியா மௌரிஸ்மோ கிராண்ட் ஸ்லாம் பட்டம் பெறுவது இதுவே முதல்முறையாகும். அவர் பலமுறை அரை இறுதி வரை முன்னேறி தோல்வியடைந் துள்ளார். வெற்றியடைந்த மௌரிஸ்மோவுக்கு சாம்பியன் கோப்பையும், தோல்வியடைந்த ஹெனினுக்கு ரன்னர் கோப்பையும் வழங்கப்பட்டது.



YARL WINDOW

BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS

- Venetian Blinds
- Pleated Shades
- Vertical Blinds
- Cellular Shades
- Roller Shades

FREE ESTIMATE



உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733 416.806.5397

5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



JENNY AUTO SALES INC.



(Kennedy & Steeles)

| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Civic 4D | 122K | 10,500.00 |
| 2000 | Dodge Caravan | 168K | 4,995.00 |
| 2001 | Toyota Corolla | 70k | 7,995.00 |
| 2000 | Honda Accord Green | - | 9,900.00 |
| 1998 | Toyota Sienna | 170k | 7,900.00 |
| 1995 | Honda Accord EX | - | 4,995.00 |
| 2004 | Toyota Corolla | 50K | 11,500.00 |
| 1997 | Honda Civic 5 Spd. | | 4,995.00 |
| 1998 | GM Savana, Cargo | - | 4,995.00 |
| 2000 | Dodge Caravan | 160K | 5,200.00 |
| 2001 | Honda Civic 2D | 100k | 8,500.00 |
| 2001 | Honda Civic beige 4D | 85K | 8,995.00 |
| 1999 | Honda Civic Silver | 72K | 7,900.00 |
| 2000 | Toyota Corolla | 110k | 8,500.00 |
| 1997 | Dodge Caravan | 145K | 3,995.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals

Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048

Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4

# வீட்டு பராமரிப்பு

## நாமும் நமது இல்லமும்


ராஜா மகேந்திரன்

தொடர்-2 2 2

## Clogged Commode - அடைப்பேற்பட்ட மலசலம் கழிக்க உதவும் ஆசனம்

*Commode இல் அடைப்பேற்பட்டால் எவ்வாறு நீக்கலாம்?*

*பொதுவாக ஒரு Commode இல் அடைப்பு ஏற்படுவதற்கு காரணமாக இருக்கக்கூடியது TRAP இற்குள் ஏதாவது ஒரு பொருள் சென்று அப்பொருள் தடைபட்டு இருப்பதே ஆகும். இவ்வாறு தொடர்ந்து செல்லமுடியாமல் அடைபட்டு இருக்கும் பொருளை அகற்ற "Plunger" ஐப் பாவிக்கலாம். சில பொருட்களை Plunger கொண்டும் நீக்கமுடியாது. இந்த சந்தர்ப்பங்களில் "Auger" என்று அழைக்கப்படும் கருவியைப் பாவிப்பதே சிறந்தது. Plunger எவ்வாறு பாவிக்கலாம். Commode இன் Bowl இற்குள் Rim (படம் 1) என்று குறிக்கப்பட்ட மட்டத்திற்கு சற்றுகீழாக வரும்வரை தண்ணீரை ஊற்றி நிரப்ப வேண்டும்.*



படம் 1

*(குறிப்பு - இந்த நேரத்தில் Commode ஐ Flush பண்ணக்கூடாது) அவ்வாறு செய்தால் Over Flow ஆகக்கூடிய சந்தர்ப்பமும் உண்டு.*

*Plunger இன் Suction cup ஐ Commode இன் opening பகுதியில் வைத்தல் வேண்டும். Plunger ஐ மேலும் கீழுமாக அமைக்க வேண்டும். இவ்வாறு அசைப்பதால் Commode Bowl இல் இருக்கும் தண்ணீரும் கீழே செல்லவேண்டும். அவ்வாறு செல்லாது இருந்தால் Auger ஐப் பாவிக்கவேண்டும். எவ்வாறு "Auger" ஐப் பாவிப்பது*

*Warning - Commode இற்கு பாவிப்பதற்கு என்று ஒருவகை Auger இருக்கின்றது. இதனைத் தவிர்ந்த வேறுவிதமான Auger ஐப் பாவித்தால் Commode இன் Bowl இல் காயங்கள் (Scratch) ஏற்படலாம். இதனால் கவனமாக இருத்தல் வேண்டும்.*


*செய்முறை (படம் - 2)*

*Augur ஐ Commode இன் Bowl இற்குள் செலுத்தவேண்டும். எவ்வாறு தூரம் செல்லுமோ அவ்வளவு தூரத்திற்கு செலுத்துதல் வேண்டும். எப்பொழுதும் Augur இன் கைபிடியை ஒரேதிசையில் சுற்றுதல் வேண்டும்.*

*Augur இன் கைபிடியை சுற்றும்போது சாதுவாக அழுத்தம் கொடுத்தல் வேண்டும். இவ்வாறு செய்தால் அடைக்கப்பட்டு இருக்கும் பொருள் நீங்ககூடிய சந்தர்ப்பம் உண்டு.*

*இந்த முறையினால் அடைக்கப்பட்டு பொருள் நீங்காவிட்டால் அனுபவமிக்க Plumber ஒருவரைக் கூப்பிடுதலே சிறந்தவழியாகும்.*

*குறிப்பு - சில சந்தர்ப்பங்களில் Commode ஐ Flush பண்ணும் போது*



படம் 2

*(தண்ணிக்கும் அதனுடன் மற்றைய கழிவுகளும் சேர்ந்து திரும்பி வருமென்றால் (Back Up) நகரசபையின் Plumber ஐ கூப்பிடுவது நல்லது நகரசபையின் இலவச சேவைகளில் இதுவும் ஒன்றாகும். அவர்களை அழைப்பதால் செலவுகளும் கிடையாது, இந்த சேவைக்கு 24 மணிநேர சேவை இருக்கின்றது.*

*Commode இற்குள் அடைப்பில்லாமல் இருக்கும் சந்தர்ப்பங்களில் கழிவுகள் போகும் குழாய்களிலும் அடைப்புகள் தடங்கல்கள் ஏற்பட்டு இருக்கலாம்.*

*Plunger ம் அடைப்பு எடுக்காமல் இருக்கும் சந்தர்ப்பத்தில், இதற்கென தயாரிக்கப்பட்ட Camera ஐ செலுத்தி அடைப்பை உறுதிப்படுத்திய பின்பு அதற்கேற்ப சிறந்த முறையை அறிந்து அடைப்பை நீக்க வேண்டும்.*



$179,900
Birchmnt/Ellesmere
Luxury Condo
1+1 Bedrooms, 1 Washrooms
Den Can Be Used As A 2nd Bedrm,
Laminate Floor Thur Out
TTC, School,


$294,900
Morningside/Finch
Freehold Townhouse
Luxury Balmoral Model,
3 Bedrooms, 3 Washrooms,
Fireplace, Easy Access to Shopping, TTC


$119,900
Markham/Sheppard
Low Rise Condo
1+1 Bedrooms, 1 Washrooms
Den Can Be Used As A 2nd Bedrm,
Mins. To 401
TTC, School,


$318,900
Lawrence / Manse
Well maintained
Detached 2- Storey
4 Bedrooms, 3 Washrooms
TTC, School

HOMELIFE Higher Standards


Coming Soon
TRIDEL PROJECT
LUXURY CONDOMINIUM
DONMILLS & EGLINTON


Raja Mahendran, P.Eng.
Broker/Owner
Cell: 416.315.9397

HOMELIFE/GTA Realty Inc.
1711 McCowan Rd, Suite 206, Toronto, ON, M1S-3Y 3., Office: 416-321-6969
145 Traders Blvd., Suite 28, Mississauga, ON,. Office: 905-712-2666

கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling


Nantha Aiyadurai
Cell: 613 850 9931
Business: 613 823 7555 Fax: 613 825 8177
3777 Strandherd Drive, Nepean, Ontario K2J 4B1

COLDWELL BANKER
COBURN REALTY

BRIARGREEN

Asking Only:$299,900

# சிவபெருமானின் நாடகங்கள்

### கடந்த இதழ் தொடர்ச்சி

## திருக்குறிப்பு நாடகம்

காஞ்சி மாநகரத்தில் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் மக்களின் குறிப்பறிந்து தொண்டு செய்து வந்தார். ஆடை தோய்த்துக் கொடுப்பதில் வல்லவர்.

குளிர் காலத்தில் ஒருநாள் சிவபெருமான் வறியவர் வேடம் பூண்டு அழுக்கு ஆடையுடன் நாயனாரை அடைந்தார். நாயனார் அவரை வணங்கி "கந்தையைத் தந்தருளும் வெளுத்துத் தருகிறேன்" என்றார். வறியவர் "இந்தத் துணியை விட்டால் அணி-வதற்கு வேறில்லை. இரவிலே குளிரும் அதிகம். பொழுது போவதற்குமுன் வெளுத்துத் தாரும்" என்று துணியைக் கொடுத்தார்.

நாயனார் தமது பணியை நிறைவேற்ற முடியாவண்ணம் இறைவர் மழையைப் பொழிவித்தார். நாயனார் மழைவிடும்வரை காத்திருந்தார். மழைவிட்டபாடில்லை. பொழுதும் படப்போகின்றது. நாயனார் கவலை மேலிட்டது. தனது தொண்டு தடைப்பட்டுவிட்டதே என்று வேதனையுற்றார். "பாவியேன் தவறு செய்துவிட்டேன்" என்று துணி தோய்க்குங் கல்லிலே தமது தலையை மோதினார். அவ்வளவிற் சிவபெருமான் தமது திருக்கரத்தால் அவரது தலையைத் தாங்கிக் காட்சிகொடுத்து அருள்பாலித்தார்.

## பிள்ளைக்கறி நாடகம்

திருச்செங்காட்டங்குடி பரஞ்சோதியார் அடியார்களுக்கு அமுதூட்டிய பின்னர் தாம் உண்ணும் விரதங்கொண்டவர். முன்பு சோழ மன்னனிடத்தில் அமைச்சராய் இருந்தவர். போர்க்கலையிலும் வல்லவர். இருப்பினும் எல்லோரிடத்தும் பணிவாக நடந்து தம்மைச் சிறியவராகக் காட்டிக் கொள்வார். அதனால் அவருக்குச் சிறுத்தொண்டர் என்னும் பெயர் வரலாயிற்று.



சிறுத்தொண்ட நாயனாரின் பக்தியோடு விளையாடத் திருவுள்ளங் கொண்டார் சிவபெருமான். வயிரவராகத் திருச்செங்காட்டங்குடியை அடைந்தார். அங்கு சிறுத்தொண்டரைக் கண்டார். சிறுத்தொண்டர் உணவு அருந்த வருமாறு அழைத்தார். தான் உண்பது நரப்பசு என்றும் அதைத் தொண்டரால் தரமுடியாது என்றுங் கூறி வயிரவர் மறுத்தார். முடியும் என்றார் தொண்டர். "அப்படியாயின் இதனைக் கேளும்: எனக்கு உணவாகும் நரன் ஐந்து வயதுடையவனாய் ஒரு குடிக்கு ஒருவனாய் இருத்தல் வேண்டும். அவனைத் தாய் மகிழ்ந்து பிடிக்கத் தந்தையும் மகிழ்ந்து அரிதல் வேண்டும். இவ்விதம் செய்யும் சமையலே எமக்கு உவப்பாகும்" என்றார் வயிரவர்.

சிறுத்தொண்டர் கடுகி நடந்து மனைவிக்கு விடயத்தைக் கூறினார். இருவருமாகச் சிந்தித்தனர். ஒருகுலத்துக்கு ஒரு மகனை யாராவது தருவார்களா? பெருந்தொகைப் பொருளை விரும்பித் தந்தாலும் உவப்புடன் பெற்றவர்களே அரிந்து தருவார்களா? முடியாத காரியம் என முடிவுசெய்து தமது ஒரே மகன் சீராளனைச் சமைக்கத் தீர்மானித்தனர்.

பள்ளிக்குச் சென்ற மைந்தனை அழைத்துவந்து வயிரவர் விருப்பம்போல அரிந்து சமைத்தனர். உணவை அருந்த முன்னர் சிறுத்தொண்டரையும் தம்முடன் இருந்து உண்ணும்படி கூறினார் வயிரவர். அவரும் அமர்ந்தார். அமர்ந்தபின் அவரது மைந்தனையும் அழைக்கச் சொன்னார். அவன் வரமாட்டான் என்றார் அடியார். அவன் வந்தாலன்றித் தாம் உணவு உண்ணப் போவதில்லை என்றார்.

வேறு வழியின்றி, சிறுத்தொண்டரும் மனைவியாரும் வெளியே சென்று திருவருளை நினைந்து "சீராளா வாராய்!" என்று அழைத்தனர். அவ்வளவில் சீராளன் வந்தான். அவர்களால் நம்ப முடியவில்லை. மூவருமாக வீட்டினுள் வந்து பார்த்தபோழுது வயிரவரையும் காணவில்லை, சமைத்த உணவையுங் காணவில்லை. அதிசயித்து நின்றபொழுது அரனார் காட்சி கொடுத்து அவர்களை உடன் அழைத்துச் சென்றருளினார்.

## திருவிளையாடல்கள்

பரஞ்சோதி முனிவர் திருவிளையாடற் புராணத்திற் சிவபெருமானின் 64 திருவிளையாடல்களைப் பாடியிருக்கின்றார். சில திருவிளையாடல்கள் பல படலங்களில் தொடர் கதைகளாவே பாடப்பட்டுள்ளன. அவற்றுள் நாடகப்பாங்கான சிலவற்றை நோக்குவாம்.

## தடாதகைப் பிராட்டியார் பொருட்டு ஆடிய நாடகங்கள்

மலயத்துவச பாண்டியன் தவத்தால் பார்வதிதேவியார் அவனுக்கு மகளாக அவதரித்தார். சகல கலைகளையும் கற்று, தந்தை முடிசூட்டுவிக்க அரசியாகி உல-கலாம் வென்று அவர் ஆட்சி புரிந்துவருங் காலத்தில் சிவபெருமான் (1) சோமசுந்தர பாண்டியனாக எழுந்தருளிப் பிராட்டியாரைத் திருமணஞ் செய்தார். (2) திருமணங் காணவந்த பதஞ்சலி, வியாக்கிரபாத முனிவர்கள் பொருட்டு வெள்ளியம்பலத்தில் திருநடனஞ் செய்தார். (3) திருமணத்தில் மாதவர், வேதியர், மன்னர் முதலானோர் விருந்துண்டும் மிகுந்த உணவு மிஞ்சியிருப்பதாகத் தேவியார் திருவாய்மலர, இறைவர் தமது குடையாளாகிய குண்டோதரனுக்கு அன்னமிடச் செய்தார். (4) அவனுக்கு அவ்வுணவுகள் பற்றாமையால் அன்னக்குழி அருளினார். அவனது நீர் வேட்கையைத் தீர்க்க வைகையை வருவித்தார். (5) தடாதகையார் வேண்ட அவரது தாயார் காஞ்சனமாலை கடலாட ஏழ்கடலையும் அழைத்தார். (6) காஞ்சனமாலையுடன் நீராட இறந்த அவளது கணவன் மலயத்துவசனையும் வருவித்தார். (7) தடாதகைப் பிராட்டியாருக்கு உக்கிரகுமார பாண்டியன் பிறக்க அருள்பாலித்தார். (8) அவனுக்கு வேல், வளை, செண்டு முதலாய ஆயுதங்களை வழங்கினார். (9) அவ்வாயுதங்களை கடல்மீதும் இந்திரன் மேலும் மேருமீதும் ஏவச் செய்தார்.

**கவிஞர் வி. கந்தவனம்**



# சேயின் இழப்பு



அம்மா அழுகின்றாள்
அம்மா அழுகின்றாள்

அம்மன் தனித்திருந்து நெடுமூச்சுவிட
அவள் துணைவன் சிவனும்
மூத்த மகன் கணேசனும்
மனம் தளர்ந்து மண் நோக்க

புத்தர் இயேசு அல்லா முருகன்
அறிவு கலங்கி நிற்க

அவள் ஈன்ற மக்கள் கூட்டம்
அகிலம் எங்கும்
அலைந்து உழன்று அல்லற்பட

வயிற்றில் நெருப்பைக் கட்டி
அம்மா அழுகின்றாள்

கப்பல் நிறைந்த கள பூமி
களஞ்சியங்கள் வற்றாத பொற்பூமி
வந்தோர்க்கு வாரி வழங்கும்
பாரி பேகன் வாழும் பூமி
இல்லை என்பது இல்லாத வள பூமி

அம்மாவின் நிலம் தனித்திருக்க
அகதி நிலத்தின் உடையவன்
காட்டில் ஒதுங்கி வாழ
தாயகத்திலும் புகலிடத்திலும்
தாயக்கட்டைபோல் உயிர்கள் உருள
வந்தேறு குடிகளை
உலகமயம் வாட்டி வதைக்க

அம்மா அழுகின்றாள்

தன்னை விட்டு மறைந்த தனது
தவப் பிள்ளைகளை நினைந்து

அம்மா அழுகின்றாள்
தினமும்
அம்மா அழுகின்றாள்.




**முத்துராஜா**


18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 171



**இட - வல**

1. தமிழீழத்தின் ஓர் ஊர்
2. வாசனைத் திரவியம் ஒன்று( வல-இட)
3. பார்
4. புடைவை (வல-இட)
5. இளமரம்
6. வியாபாரம்
8. உடலின் பகுதி ஒன்று (வல-இட)
9. சம்மதி (வல-இட)
10. உறங்கு
12. திரவத்தின் திவலை

**மேல் - கீழ்**

1. குரு பக்தியில் சிறந்தவன்
2. உடன்படு
3. மேகம் (கீழ்-மேல்)
4. செல்வம்
5. பெருமையான தோற்றம்
7. பரம்பரை
9. சொல்லு
10. மழைத்தூறல் (கீழ்-மேல்)
11. பாட்டு

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| கா | ர் | த் | தி | கை | ப் | பூ | |
| ப் | | | ட் | | | வ | ரை |
| பி | ற் | பா | டு | | ம | ர | பு |
| ய | | ய் | | தி | ரு | சு | |
| ம் | | | ன் | | ம | | பு |
| | | | ச | ங் | க | ர | ன் |
| வி | | | ஞ் | | ன் | | ன |
| செ | ண் | ப | க | ம் | | வா | கை |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் February 25, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**170இல் வெற்றி பெற்றோர்**
1) S. Yoganathan, Toronto
2) M. Parasakthi, Mississauga

- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]

# மோதல் நிகழ்வும் நட்ட ஈடுகளும்

ஏனைய வாகனங்களுடன் உருவாகும் "மோதல் நிகழ்வும்" (Collision) மற்றும் "பரந்த விசாலமான இழப்புகளின் நட்ட ஈடுகளும்" (Comprehensive) என்பதன் அர்த்தம் யாது? இது சட்ட ரீதியாக கண்டிப்பாக வைத்திருக்க வேண்டிய ஒப்பந்தமா?

*இவ் ஒப்பந்தங்கள் சட்டரீதியாக கண்டிப்பாக வைத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. மிகப்பழைய வாகனங்களை வைத்திருப்பவர்கள் பொதுவாக இதற்குரிய செலவு முக்கியமற்ற செலவு என கருதி தவிர்த்துக் கொள்வது வழமையாகும். சட்ட ரீதியாக அடிப்படையில் வைத்திருக்க வேண்டியவை பின்வரும் விடயங்கள் மட்டுமாகும்.*

*1. Liability (தங்களின் வாகனம் ஓட்டும் தவறினால் ஏனையோருக்கு ஏற்படும் பாதிப்புகளுக்கான நட்டஈடுகள்)*

*2. Accident Benefits (தங்களுக்கு ஏற்படும் உடல்காயங்கள்)*


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
**416.321.0999**


*3. Uninsured & Unidentified Coverage (காப்புறுதியில்லாத மற்றும் இனம் தெரியாத வாகனங்களினால் தங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள்)*

*4. Direct Property Compensation Coverage (தங்களில் தப்பு இல்லாத தங்களின் வாகனங்களுக்கு ஏற்படும் மேற்குறிப்பிட்ட நான்கும் மட்டுமே கண்டிப்பாக சட்டரீதியாக வாகனம் ஓட்டுபவர்கள் வைத்திருக்க வேண்டிய நட்டஈட்டு ஒப்பந்தங்கள் ஆகும். இதனை வழமையான ஆங்கில மொழியில் "One way insurance" அதாவது அடிப்படை காப்புறுதி என குறிப்பிடலாம்.*

*அதற்கு மேலதிகமாக விரும்பினால் சற்றுமேலதி பணம் கொடுத்து பெற்று வைத்திருக்கும் ஒப்பந்தங்களில் ஒன்றே "மோதல் நிகழ்வு"க்குரிய (Collision Coverage) நட்டஈட்டு பகுதியாகும்.*

*இப்பிரிவின்படி தங்களின் தப்பால் தங்களின் வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள், ஏதாவது ஒரு மதில், சுவர், மரங்களுடன் மோதி தங்கள் வாகனங்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் ஆகியனவற்றுக்கு இப்பிரிவில் இருந்து நட்டஈடு பெறலாம்.*

*இதில் நட்டஈடு பெற்றால் மீண்டும் புதுப்பிக்கும் போது கட்டணம் உயர்வதும் தவிர்க்க முடியாத ஒன்றாகும். மதிப்பீடு செய்யப்பட்ட இழப்பில் தங்களின் கையால் செலுத்த வேண்டியது சிறுதொகை தவிர அதனை ஆங்கிலத்தில் "Deductible" மிகுதி நட்டஈட்டினை காப்புறுதி கம்பனி வழங்குவார்கள்.*

*இதுதவிர பரந்த விசாலமான இழப்புகளின் நட்டஈடுகள் (Comprehensive Coverage) எனப்படுவது பின்வரும் பாதிப்புகளினால் வாகனத்திற்கு ஏற்படும் இழப்புகளை குறிப்பிடலாம்.*

- *வாகனம் தரிக்கப்பட்ட இடங்களில் இன்னொருவரினால் உடைக்கப்படுதல் (Vandalism)*
- *தீ பிடித்தல் (Fire)*
- *திருட்டு போதல் (Theft)*
- *பூமி அதிர்ச்சியினால் இழப்பு (Earthquake)*
- *கலவரங்களினால் பாதிப்பு (Riot or Civil Disturbance)*
- *வாடகை கார் பெறும் உரிமை*
- *தரித்து நின்ற இடங்களில் இன்னொரு வாகனங்களினால் மோதல்*

*இப்படி ஏராளமான விடங்களை குறிப்பிடலாம்.*



பொதுவாக விலைஉயர்ந்த வாகனங்கள் வைத்திருப்பவர்கள், மேல்குறிப்பிட்ட ஒப்பந்தங்களை செலவினை பற்றி அக்கறை கொள்ளாது பெற்று வைத்திருப்பது வழமையாகும். மேற்குறிப்பிட்ட பரந்த விசாலமான நட்டஈட்டு பிரிவிலும் சில விதிவிலக்குகள் உண்டு. உதாரணமாக

*1. திருட்டு போதல், அல்லது திருடப்பட்டு பின்னர் மீளப்பட்ட வாகனத்தில் வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்புகள் என்னும் நட்டஈட்டு கோரிக்கையில் அதே வீட்டில் இருக்கும் ஒருவரோ அல்லது ஒரு கம்பனி வாகனத்தினை கம்பனி ஊழியர் ஒருவரோ திருடி அதனால் ஏற்படும் எந்த பாதிப்புகளுக்கும் நட்டஈடு இல்லை.*

*ஆனால் இப்பரந்த விசாலமான நட்டஈட்டு பிரிவில் "All Perils" என ஆங்கிலத்தில் அதாவது எல்லா வகையான ஆபத்துக்களுக்கும் பாதுகாப்பு என ஒரு சொற்றொடர் குறிப்பிட்டிருந்தால் மட்டும் ஒருவிதி விலக்கு உண்டு. மதுபோதையில் வாகனம் செலுத்தும் போது விபத்து நடந்தால் அல்லது ஏதாவது கிரிமினல் குற்றங்களுக்கு வாகன மோட்டத்தின் செயல்பாடு அல்லது வாகனமோ உட்படுத்தப்பட்டு இருந்தாலும் நட்டஈடு வாகனங்களுக்கு கிடைக்கமாட்டாது.*

*(ஆனால் தங்களின் வாகனத்தினை தங்கள் சம்மதத்துடன் செலுத்தியே ஒருவர் மதுபோதையில் ஓட்டிச் சென்று ஒரு மரத்துடன் மோதி தங்கள் வாகனத்திற்கு பாதிப்பு ஏற்பட்டால் காப்புறுதி கம்பனி நட்டஈட்டினை வழங்கிவிட்டு வாகனத்தினை ஓட்டிய நபரிடம் இருந்து சட்டரீதியாக அறவிட்டு கொள்ளும்.)*

*இதேமாதிரி வாகனம் திருத்தக் கொடுக்கும் இடங்களில் பரிசோதனைக்காக ஓட்டிப்பார்க்கும் போது விபத்து நடந்து பாதிப்பு நடந்தாலும், தங்கள் காப்புறுதி கம்பனி நட்டஈட்டினை வழங்கிவிட்டு விபத்தினை உருவாக்கிய வாகனம் திருத்தும் நிலையிலிருந்து அறவிட்டு கொள்ளும்.*






NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU




Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU

# நாடி சுத்தி

டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
'யோக சித்தர்' வவுனியா, இலங்கை
Tele. - 416.291.3022

முன் குறிப்பிட்டபடி சிலகாலம் பயின்றபின் அடுத்த கட்டத்திற்கு செல்லலாம். விரிப்பில் நிமிர்ந்து அமர்ந்து வலது கை பெருவிரலை வலது நாசிக்கு அருகிலும் வலது சுட்டு விரலை இடது நாசிக்கு அருகிலும் வைத்துக்கொள்ளவும். இப்போ வலது சுட்டுவிரலால் இடதுநாசியை அழுத்தியவண்ணம் வலது நாசியால் சுவாசத்தை நன்கு உள் இழுக்கவும். இப்படி இழுத்த சுவாசத்தை சற்று உள்ளே அடக்கவும், இதன்பின் வலது பெருவிரலால் வலது நாசியை இறுக அழுத்தியவண்ணம் இடது நாசியை மூடிய சுட்டுவிரலை தளர்த்தியபடியே அப்பாகத்து நாசியால் சுவாசத்தை வெளியேவிடவும். இப்போ சுவாசம் வெளியேறிய இடது நாசித் துவாரத்தை வலது சுட்டுவிரலால் அழுத்தியபடியே வலது நாசித்துவாரத்தில் அழுத்தியிருக்கும் பெருவிரலை தளர்த்தி அந்த நாசித்துவாரத்தால் சுவாசத்தை வெளியேவிட்டு பின் அதே நாசித் துவாரத்தால் மீண்டும் இழுக்கவும். இப்படியே மாறி மாறி சுவாசப்பயிற்சியை ஆறு அல்லது ஒன்பது முறை செய்யவும். இதை யோகாசனத்தில் 'பிரணாயமம்' அல்லது 'நாடிசுத்தி' என்பர், இதனால் உடம்பில் ஆங்காங்கு தேங்கிய சக்தி சமனப்படும். மூச்சை உள் இழுக்கும் பொழுது வயிறும் தொப்புளும் மேல் வரவேண்டும், மூச்சை வெளிவிடும்போது வயிறும் தொப்புளும் உள் செல்ல வேண்டும். இதை முக்கியமாக அவதானிக்கவும். மனத்தில் உருவாகும் சக்தி ஆங்காங்கு தேங்குவதால் (Surging of energy) நோய்கள் தோன்றுகின்றன என்பதை எமது சித்தர்களும் யோகிகளும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நன்கு கண்டறிந்து, இந்த சுவாசப்பயிற்சி மூலம் அதை சமனப்படுத்தி நோய்களை தீர்த்தார்கள். இன்றைய விஞ்ஞானிகளும் இந்த உண்மையை பல பல்கலைக் கழகங்களில் ஆராய்சிகள் மூலம் கண்டறிந்து அதை எமக்கு விளக்குகின்றனர்.

இந்த சுவாசப்பயிற்சியால் மனோசக்தி பலப்படும். இதன் உதவியால் எமது சித்தர்களும் யோகிகளும் இந்தப்பிரபஞ்சத்தையே கட்டுப்படுத்தினர் என்றால் அது மிகையாகாது!. இந்த மனோபலத்தால் தூர தேசத்தில் உள்ளவர்களின் நோய்களைக்கூடத் தீர்க்கலாம்!. இதன் அடிப்படையிலேயே பல தேவாலயங்களில் பிறருக்காகப் பிரார்த்திக்கிறார்கள். மனோசக்தி வலுவடைந்த ஒருவரின் எண்ண அலைகள் (Thought Waves) வெகு தூரத்திற்கு வியாபித்து தாக்கங்களை ஏற்படுத்தும் சக்தி வாய்ந்தவை என்னும் உண்மையை தற்போதைய விஞ்ஞானிகள் ஆராய்சிகள் மூலம் கண்டறிந்துள்ளனர். இந்தப் பயிற்சியைப் பலரும் பயின்று நற்பலனடைந்து சுக தேகிகளாக வாழவேண்டும். இந்த பிரணாயமத்தைப் பற்றி விளக்கும் சித்தர்கள் இதில் பல அபூர்வ சக்தி உள்ளது என்று விவரிக்கின்றனர். உலகம் பஞ்சபூதத்தால் இயங்குகிறது. அதாவது பிருதுவி, அப்பு. வாயு, தேயு, ஆகாயம் என்னும் பஞ்ச பூதங்களால் இயங்குகிறது. இதனாலேயே பிரபஞ்சம் இயங்குகிறது

அதேபோல் இந்த உலகில் (பிரபஞ்சத்தில்) வாழ்கின்ற அத்தனை உயிர்களும் இந்த பஞ்சபூதத்தால் இயங்குகின்றன. மனிதனும் இந்தப் பிரபஞ்சத்தில் வாழ்பவன். எனவே அவனும் இந்தப்பஞ்சபூதத்தால் செயற்படுபவன். இதைச்சற்று கவனிக்கவும். பிரபஞ்சத்தில் வாயு கூடினால் என்ன நடக்கும் என்பதை கவனிப்போம். வாயு என்பதே காற்று. காற்று கூடினால் உலகில் எவரால் தாங்கமுடியும்?, அது புயலாக வீசும், சுழல் காற்றாக வீசும், சுழி காற்றாக வீசி சில விநாடிகளில் உலகையே அழித்துவிடும். இந்த வாயு-காற்று இல்லாவிடில் உயிரனமே வாழ முடியாது!. நீர் (அப்பு) இது இல்லாவிடில் உயிரினம் வாழ முடியாது. இது கூடினால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு அனர்த்தம் விளைவிக்கும் என்பதை எவரும் அறிவர். நிலம் என்னும் பிருதுவி கூடினால் மலைக்கல்லாகி அங்கு உயிரினமே வாழ முடியாதுபோய்விடுமல்லவா? நிலம் குறைந்தால் அதில் உயிர்வாழவே முடியாதல்லவா. தேயு என்னும் நெருப்பு (வெப்பம்) கூடினால் எதையும் எரித்து விடும். அது குறைந்தால் குளிர் கூடினால் உயிர் வாழவே முடியாது என்பதை எவரும் அறிவர். ஆகாசம் என்னும் வெட்டவெளி கூடினால் சீதோஷணம் வேறுபட்டு அதில் உயிரினம் வாழமுடியாது. இதேபோல் அது குறைந்தால் அமுக்கம் குறைந்து உயிரினம் வாழ முடியாது. இவையாவும் பிரபஞ்சம் என்னும் உலகிற்கு நடப்பது. இதேபோல் இதில் வாழும் அத்தனை உயிரினத்துக்கும் சிறிதளவில் பஞ்ச பூதத்தின் தாக்கம் இருக்கவே செய்யும் இதில் மனிதரும் அடங்குவர். மனிதனின் உடம்பும் பஞ்சபூதத்தால் ஆனது. எனவே அவற்றின் பேதங்கள் மனிதருக்கு நோய் உண்டாக்க வல்லவை. பிருதுவி என்பது திண்மம். அதாவது தசை, எலும்பு கொழுப்பு நாம் உண்ணும் உணவுப் பொருட்கள் என்பன யாவும் திண்மம். அப்பு என்னும் நீர் இரத்தமாகவும், நிணநீர் ஆகவும், நாம் பருகும் நீராகவும் உள்ளது. வாயு என்னும் காற்றானது நாம் சுவாசிக்கும் காற்றாகவும், நாம் உண்ணும் உணவிலிருந்து உற்பத்தியாகும் வாயுவாகவும் எமது உடம்பில் உள்ளது. தேயு என்னும் நெருப்பானது (வெப்பம்) எமது உடம்பில் உருவாகும் சக்தியாலும், உடம்பில் பல்வேறு உறுப்புகளின் செயற்பாட்டால் உருவாகும் வெப்பத்தாலும் உடம்பில் உள்ளது. ஆகாசம் என்னும் வெளியானது உடம்பினுள் உள்ள பல உறுப்புக்களின் இடைவெளிகளில் உள்ளது. இந்த பஞ்சபூதங்களின் கூடுதல், குறைவதால் நோய் ஏற்படுகிறது என்பது எமது சித்தர்களினதும் ஞானிகளினதும் கருத்து. இதையே திருவள்ளுவர் 'மிகினும், குறையினும் நோய்செய்யும் நூலோர் வளிமுதலா எண்ணிய மூன்று' என்று குறிப்பிடுகின்றார். இதன் பொருள் திண்மம் (பிருதுவி) - நிலம், அப்பு (திரவம், நீர்), வாயு (வாய்வு) இவற்றில் எது கூடினாலும், அல்லது குறைந்தாலும் நோய் தோன்றும்.

இதை நமது மூதாதையர்களாகிய சான்றோர் தமது மனத்தில் உணர்ந்து தமது நூலில் விளக்கியுள்ளனர் என்பதாம். வலது நாசியில் சுவாசம் நிறைவாக அதாவது பூரணமாக இருக்கும்பொழுது அவர் நினைப்பவை எல்லாம் அவருக்கு நன்மை தருவதாக இருக்கும் என்று விளக்கியுள்ளனர். அது இடகலை என்னும் சந்திரகலை, இடது நாசி பூரணமாக இருப்பின் சற்று தாமதமாகவே அவர் நினைப்பவை நிறைவேறும். அந்தச்சுவாசம் வெளியே போகும்பொழுது அதாவது இரேசிக்கும் போது அவர் நினைப்பது நடக்காது என்றும் இரு நாசியிலும் சமனாக சுவாசம் இருக்கும்பொழுது அவர் விரும்புவது, நினைப்பது எல்லாம் தீதாகவே இருக்கும் என்றும் எமது சித்தர்கள் விளக்கியுள்ளனர். இதன் காரணத்தாலேயே எம்மவர் ஒரு வீட்டுக்குள் பிரவேசிக்கும்போது வலது காலை முன்வைத்து போகவேண்டும் என்பார்கள்.



அதாவது சூரியகலை நடக்கும் வலது காலை

தொடர்ச்சி 18ம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

• கழுத்து, முதுகு நோவு
• வாகன விபத்து
• மன அழுத்தம்
• விளையாட்டுக் காயங்கள்
• தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

• STRESS
• SKIN PROBLEM
• RESPIRATORY PROBLEMS
• DIGESTIVE PROBLEMS
• VARICOSE VEINS
• BACK PROBLEM / NECK PROBLEM
• TENNIS ELBOW PROBLEM
• TREAT WITH MASSAGE THERAP
• ALLERGIES
• SEXUAL PROBLEMS
• SEXUAL PROBLEMS
• CHOLESTEROL
• TUMOR
• FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537 / 416-291-3022
5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4

NTE AUTO
New Trade Engineering Inc.




ஸ்காபரோவில் 15வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத் திருத்த வேலைகளுக்கு நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.

Also Air Condition Service & Repair

SIVABALAN
416.750.1573

என். ரி. இ. ஓட்டோ இங்க்
151 NATUCKET BLVD., UNIT #12, SCARBO., ON

IN NEW MILLENNIUM WE ARE ENTERING 11TH YEAR SERVICE IN SCARBOROUGH.

# கற்பை வெற்புப் போலாக்குவது காதல்

உலகில் மக்கள் தோன்றி, வளர்ச்சி பெற்று, வாழ்வாங்கு வாழ்ந்து, தெய்வ நிலை எய்துவதற்கு அடிப்படையாக உள்ளது காதல். காதல் என்பது தூய தமிழ் சொல். சாதி, மத, நிற, மொழி பேதங்களைக் கடந்து நிற்பதும் காதல். என்றும் நிலைத்து நிற்பதும் காதல்.

உயிர்களின் பெருக்கத்திற்கு நிலைக்களமாக அமைவது காதல். ஆண், பெண் இருவரும் சரிநிகர் சமானமாக வாழ்வதற்கு, வாய்ப்பளித்து பெருமையுறச் செய்வது காதல். மனமொத்த ஆணும் பெண்ணும் மகிழ்ச்சியுடன் இணைந்து பெறும் இன்பமே காதல் இன்பமாகும். இத்தகையது என்று பிறர்க்கு எடுத்து சொல்லப்படாததாய், தமக்குள்ளே உணரப்படும் தன்மையதாய் உள்ளதே காதல் இன்பம். இளமையில் காதல் அரும்புவது இயற்கையானது. இடைவயதில் தம்பதியினர்க்கு இடைவயதில் காதல் கனிந்து விடுகின்றது. முதுமையில் தம்பதியினர்க்கு இடையில் காதல் முற்றி முதிர்ந்து விடுகின்றது. எனவே வாழ்க்கை முழுவதும் காதல் அதாவது அன்புமயம்.

ஒத்தவயதுடைய ஒருவனும், ஒருத்தியும் உள்ளம் ஒன்றியதை பின்வரும் குறுந்தொகைப்பாடல் குறிப்பிடுகின்றது. வானிலிருந்து வந்த மழைநீர் செம்மண்ணுடன் செறிந்து கலந்துள்ளது போல தமது உள்ளங்கள் அன்புடமையால் ஒன்றாகக் கலந்து விட்டனவே என்று தலைவன், தலைவியிடம் கூறுவதாக அமைந்தது இப்பாடல்

'யாயும் ஞாயும் யாரா கியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
யானும் நீயும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயர் நீர் போல
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே!'

பண்டைய மக்கள் மதித்துப் போற்றிய குலகோத்திரத்தை மறந்து, கண்ட பொழுதில் கலந்திடும் உள்ளங்கள் தண்டமிழ் சுவைபோல் இன்பம் நுகரும் விண்டிட முடியா விழுமிய உணர்வே காதல்.






காதல் செய்வீர் அதனால் கணக்கற்ற பலனுண்டு என்று பகர்கின்றார் பாரதியார்.

காதலினால் மானுடர்க்குக் கலவியுண்டாம்
கலவியிலே மானுடர்க்குக் கவலை தீரும்
காதலினால் மானுடர்க்கு கவிதையுண்டாம்
கானமுண்டம் சிற்பமுதல் கலைகளுண்டாம்
ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே
அஃதன்றோ இவ்வுலகத் தலைமையின்பம்
காதலினால் சாகாமல் இருத்தல் கூடும்
கவலை போம் அதனாலே மரணம் பொய்யாம்.

மானிடர்க்கு காதல் கட்டாயம் தேவை. காதல் செய்ய முடியாவிட்டால் காலன் வாய் பட்டுவிடுவதே மேல் என்று கவல்கின்றார் குயில் பாட்டில் பாரதியார்.

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல் சாதல் சாதல்".

காதலர்கள் காலமெல்லாம் வாழ்கிறார்கள். அம்பிகாவதி, அமராவதி காதல் இன்னும் பேசப்படுகின்றதே.

காதலுக்கு பச்சைக்கொடி காட்ட வேண்டும். காதல் தெய்வ சம்பந்தமுடையது. எனவே காதலுக்கு யாருமே தடையாக இருத்தல் கூடாது. நாடகத்திலும் காவியத்திலும், திரைப்படங்களிலும், காதல் காட்சியைக் கண்டு களிப்படைகின்றோம். அக்காட்சிகளைக் கண்டுகளிக்க பணத்தையும் நேரத்தையும் செலவிடுகின்றோம். ஆனால் நிஜவாழ்க்கையில் காதல் செய்பவரை கண்ணுறும் போது கட்டுக்கடங்காத கடுஞ்சினம் கொள்கின்றோம். ஒருவேளை அச்சந்தர்ப்பம் தமக்குக் கிடைக்கவில்லையே என்ற ஆதங்கத்தினால் போலும்.

"நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால்
நாட்டினர் தாம் வியப் பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்"

எனவே காதலின் சிறப்பை அதன் தெய்வீகத்தை உணர்ந்து அதற்கு அங்கீகாரம் அளித்தல் வேண்டும். ஏனெனில் காதலையோ காதலரையோ கட்டுப்பாடு செய்தல் முடியாது என்கின்றார் பாரதிதாசன்.
'காதல் அடைதல் உயிரியற்கை அது
கட்டில் அகப்படும் தன்மையதோ'

காதல் மிகவும் வல்லமை உடையது எதிர்ப்பை இளக்கரமாகக் கருதுவது எத்தனை தடைகள் ஏற்பட்டாலும், பித்துப்பிடித்தது போல் சித்தம் ஒன்றை சத்தியம் செய்து சாதனை புரியவைக்கும்.

"காற்றில் ஏறி அவ்விண்ணையும் சாடுவர்
காதல் பெண்கள் கடைக்கண் பணிப்பிலே
என்பதால் அறியலாம்.

காதல் செய்தல் இயற்கையின் நியதி. அது கற்பு நிலைத்து நிற்பதற்குரிய களத்தையும் அமைத்துக் கொடுக்கின்றது. உள்ளம் உந்திடும் காதலே உண்மைக் காதல். அதுவே உயர்வான காதல். எனவே கருத்து ஒன்றிய அணங்கு கிடைக்கப்பெற்றால் அவளுடன் பிணங்கிக் கொள்ளாமல் சுணங்காமல் இணங்கிப்போய் விடுங்கள். அப்பொழுதுதான் வாழ்வில் வசந்தம் வீசும்.

**நா.க. சிவராமலிங்கம்**

மானிடக் காதலுடன் இறைகாதல் பற்றியும் பேசப்படுகிறது. இது நாயக நாயகி பாவம் எனப்படுகிறது. ஆண்டாள், மணவாசகர் போன்றோர் இந்நெறியில் நின்றனர். தன்னை மறந்து தன் நாமம் கெட்டு தலைவனாம் இறைவனுக்கு ஆட்படுதலே இதுவாகும்.

SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







Fork Lift licence
From $75.00

Truck licence A-Z
From $599.00

In Classes
365 (Learning Permit)
Dangerous Goods
Border Crossing
Air Brake (Z)
Log book

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

Air brake

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
Pl. Call: Raja / Shan
416.412.7618 / 416.913.9574
416.829.0603
40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

APARTMENTS FOR RENT
குளிர்காலத்தில்!
உங்களையும் பிள்ளைகளையும் பாதுகாப்பாக வைத்திருக்க...

*We have nice newly renovated Apartments in a well heated Apartment Building in Scarborough with a Tamil convenience store inside*
*1, 2 & 3 bedroom Apartments.*

Two months free rent*

Close to Tamil stores, Restaurants, TTC, Go Train & Schools, etc.

* For new tenants for a limited time

Pl. Call: 416.264.2818

# இதயத்தின் இன்னொரு கதவு

## ஒடும் நீர் உறைவதில்லை 06

இதயத்தின் கதவுகள் கண்கள். இதைவிட இன்னொரு கதவும் உண்டு. அதற்கு வருவதற்கு முன் எல்லோராலும் அறியப்பட்டுள்ள கண்களைப் பற்றிச் சிறிது பார்ப்போம். உள்ளத்தின் உள்ளே இருப்பதை மாறுபாடின்றி அப்படியே வெளிக்கொணரும் சாதனம் கண்கள். இவை ஒரு வழிப்பாதையல்ல. இருவழிப்பாதை. நமது உள்ளத்தில் உள்ளதை மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவது மட்டுமல்ல மற்றவர்களது கருத்துக்களை எவ்வளவு தூரம், எவ்வாறு ஏற்றுக்கொள்கிறோம் என்பதையும் காட்டிக் கொடுத்துவிடும். அதாவது உள்வாங்கல் வெளிப்படுத்தல் ஆகிய இரு நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்துச் செயற்படும் திறன்மிக்கது கண்கள். எமது உள்ளத்தின் உணர்வுகள் கண்கள் மூலம் எவ்வாறு வெளிப்படுத்துகின்றன என்பதை அறிந்து கொள்வது அவசியம். மகிழ்ச்சி, கவலை, கோபம், பாசம், அன்பு, காதல் போன்ற எல்லா உணர்வுகளும் நம்முடன் தொடர்பு கொள்பவருக்கும் நமக்கும் உள்ள உறவைப் பொறுத்து கண்கள் மூலம் பரிமாறப்படுகின்றன.

KG Master
416.725.5112

நான் கோபமாக இருக்கின்றேன் என்றால் எனது கண்கள் இறுக்கமடைந்து முகத்தின் தசைகள் அசைவின்றி அகோரமாகக் காட்சியளிக்கின்றேன் என்பது பொருள். கோபத்தில் ஒருவரும் அழகாக இருப்பதில்லை வாசகர்களே. அழகாக இருக்க வேண்டுமாயின் மகிழ்ச்சியாக இருங்கள். மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்றால் கண்கள் இலகுவாக்கப்பட்டு முகத்தின் தசைகள் சுயமாக அசையும் தன்மையைப் பெற்றுவிடுகின்றன. நீங்கள் சிரிப்பதும், அழுவதும், கோபப்படுவதும், கவலைப்படுவதும் கண்களால்தான். கண்களைக் கோபமாக வைத்துக்கொண்டு சிரிக்க முடியாது. அதேபோன்று இலகுவாக வைத்துக்கொண்டு கோபிக்கவும் முடியாது. எனவே உங்கள் உணர்வுகளின் வெளிப்பாடு கண்களால் அறியப்படுத்தப்படுகின்றன.

இதே கண்கள் இன்னொரு விடயத்தையும் செய்யும். அதாவது உங்களது உள்ளத்தூய்மை எப்படியானது என்பதை உங்களுடன் நேருக்குநேர் இருந்து உரையாடும் நபருடைய கண்கள் சொல்லும். அதாவது கண்களின் தொடர்பு மற்றவரது உணர்வுகளுக்கு மாற்றத்தை உண்டுபண்ணக்கூடியது. சிறு பிள்ளைகளுடன் நான் கண்பார்வையால் அவர்களது உணர்வு மாற்றங்களை அளவிடுவதுண்டு. ஒரு குழந்தையைச் சிரித்த முகத்துடன் பார்ப்பேன். அதுவும் சிரிக்கும். உடனே முறைத்துப்பார்க்கத் தெரியாது. அதற்குக் கர்வம் அல்லது அகங்காரப் புத்தி வேண்டும். அந்தப் புத்தியைப் பெற்றதும் குழந்தைத் தன்மை அற்றுப் போய்விடும். குழந்தைகளின் சிறப்பு இயல்பு என்னவென்றால் நேரடியாக நமது கண்களுடன் தொடர்பு கொண்டு எம்மை அளவீட்டுக் கொள்வார்கள். கண்கள் ஒலியற்ற ஒரு தொடர்ப்பு சாதனமாக இயற்கையாகவே நமக்கு அமையப்பட்ட ஒன்று. சிறுகுழந்தைகள் பொய் சொல்லும் போது தலையைக் குனிந்து கண்களின் தொடர்ப்பைக் கட்டுப்படுத்தி கொள்வார்கள். பெரும்பாலான குழந்தைகள் கண்களைக் கசக்கியோ அல்லது தலையணையில் முகத்தை மறைத்துக் கொண்டோ கத்துவார்கள். இதன் முழுநோக்கமும் கண்களின் தொடர்பை இல்லாமல் செய்வதுதான்.

ஒலியற்ற தொடர்புசாதனமாக இந்தக் கண்கள் (கதவுகள்) உங்கள் உள்ளத்துணர்ச்சிகளை வெளிப்படுத்துவதாயின் அதை அளவிடுகின்ற ஒருவர் உங்கள் முன்னிலையில் இருந்தேயாக வேண்டும். அதாவது ஒருவரது உணர்வுகள் என்ன என்பதை இன்னொருவரது கண்கள் தொடர்புகொண்டு அறியவேண்டும். எனவே நேருக்குநேர் மூலம் தான் இந்தக் கதவுகள் உணர்வுகளை வெளிப்படுத்த முடியும்.

இதயத்திற்கு கண்களைவிட இன்னும் ஒரு கதவு உண்டு. பலருக்கு இந்த விடயம் ஆச்சரியமாக இருக்கலாம். இந்தக் கதவும் உங்களது உள்ளத்தில் உள்ளதை வெளிப்படுத்துவது தான். ஆனால் இதற்கு ஒலி உண்டு. அதுதான் உங்கள் வார்த்தை. இந்த வார்த்தையில் ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் மிக இலகுவாக உங்களை அறியாமலே இனங்காட்டிவிடும். உங்களின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் அடிப்படையானது. உள்ளத்தின் ஒளிவடிவம் கண்கள். ஒலி வடிவம் வார்த்தைகள். இந்த வார்த்தைகள் ஒருவழிப் பாதை. போனது போனது தான். அதனால்தான் அறிவு ஜீவிகள், மேதைகள், அறிஞர்கள் என்று பல்வேறு பெயர்களால் குறிப்பிடப்படும் மானிடர்கள் கண்டறிந்த உண்மை வார்த்தைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதே. வார்த்தைகளின் அதிசிறப்பான அம்சம் என்னவென்றால் அவற்றைச் சரியான முறையில் பயன்படுத்துவதன் மூலம் உங்கள் வாழ்க்கையை நெறிப்படுத்த முடியும். ஏனெனில் ஒரு வார்த்தையை நீங்கள் கூறும்போது அதை முதலில் கேட்பவர் நீங்கள் தான். உங்களது உட்காது கேட்ட பின்னால்தான் அவை ஒலிவடிவம் பெற்று மற்றவர்களாலும், உங்கள் புறக்காதாலும் கேட்கப்படுகின்றன. இங்கே மிக முக்கியமான ஒரு விடயத்தை வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டும். அதாவது எதை நீங்கள் கூறுகின்றீர்களோ அதுவாகவே நீங்கள் மாறுகின்றீர்கள்.

பேசப்படும் வார்த்தைகளின் பலம் பலருக்குப் புரிவதில்லை. இந்தக் கட்டுரையை வாசிக்கும் நீங்கள் இங்கே கூறப்படும் விடயங்களைக் கடைப்பிடிப்பீர்களாயின் உங்கள் எதிர்பார்ப்புக்கள் நிச்சயம் உங்களுக்குச் சாதகமாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை. அண்மைக்காலங்களில், எம்மைப் பற்றி உயர்வாக எண்ணுவது மட்டுமல்ல அந்த எண்ணங்களை வார்த்தைகளாக்கித் தினமும் கூறுவதனால் பல சாதனைகளை அடையலாம் என்பதையும் நிரூபித்திருக்கிறார்கள். குணப்படுத்த முடியாது என்று வைத்தியர்களால் கைவிடப்பட்ட நோயாளிகள் இந்த சுயமுன்னேற்ற வார்த்தைகளால் குணமடைந்துள்ளார்கள்.

ஆனால் நடைமுறையில் நாம் நாளாந்தம் சந்திக்கும் மனிதஜீவிகளுள் மிகப் பெரும்பான்மையானவர்கள் தன்னம்பிக்கையற்றவர்களாகவும், எதைக் கூறினாலும் எதிர்மறைவிளைவுகளையே கவனத்திற்கொண்டு அதிலிருந்து தம்மைக் காப்பாற்ற முடியாது என்று முழுமனதுடன் ஏற்றுக்கொண்ட அப்பாவிகளாகவும் காணப்படுகிறார்கள். இவர்களுக்குப் பஞ்சம் நேர்த்தியான வார்த்தைகள் தான். இவர்களின் வாய்மணம் எப்படியே தெரியாது. வார்த்தை மணமோ சகிக்கமுடியாது. இவர்களுக்கு வாய்வார்த்தைகளின் வயிற்றுப் போக்குச் சாதனம் தாங்கள் மட்டுமல்ல தன்னைச் சார்ந்தவர்களையும் அந்த நாற்றத்துக்குள் இழுத்துக் கொள்வார்கள். நேர்த்தியான வார்த்தைகள் இவர்களுக்கு அருவருப்பூட்டும். நண்டு தன் வாயால் அழிவது போல் இவர்கள் தம்வாழ்வை தாமாகவே அழித்துக் கொள்வார்கள். எந்த விடயத்திலும் பாதகமான விளைவுகளையே கருத்திற்கொள்வார்கள். வீடு வாங்கினால் பூகம்பம்




தொடர்ச்சி 15ம் பக்கம்


# SAFETY TRUCKS

**Training School Ltd.**

Training & Trucking Classes A, D & Z




In Classes

- 365 (Learning Permit)
- Log Books
- Air Brake (Z)
- Dangerous Goods
- Border Crossing
- Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian
Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

YOGAN SOCKALINGAM

Truck Driving போதனாசிரியர்


905-793-9546 / 416-616-5979

4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON L6T 4M3



Educate your children to be original as well as competent to face the future with zest and self-confidence

பெரும்பாலான குழந்தைகள் பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள் ஆனால் ஒரு சில குழந்தைகளே கற்கிறார்கள்.
ஏனெனில்...




**கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை**

*Many children are schooled*
*but few are educated.*
*Because...*

Education = Intelligence + Character

**Training Classes**
**for children 7 to 16 years old**

*Memory Power*
*Concentration*
*Listening Skill*
*Reading Skill*
*Goal Setting*
*Team Work*
*Performance*
*Presentation Skill*
*Time Managment*



*Self-Confidence*
*Self-Image*
*Self-Discipline*
*Patience*
*Obedience*
*Positive Thinking*
*Winning Attitude*
*Taking Responsibility*
*Leadership Qualities*

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611 or (416) 725-5112
kgmaster@mysecondpower.com
www.mysecondpower.com

# என் வாழ்வின் நற்செய்தி நானே நான்தான்!

## ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 71

என் பிரச்சினைகளை வெற்றிகரமாகக் கையாளவும், என் உடல், உள, ஆன்மீக ஆரோக்கியத்தை சரிவரக் கவனித்துக் கொள்ளவும் அத்தியாவசியமான திறமைகள் அனைத்தும், நான் உணராவிடினும் நிச்சயம் எனக்குள் மறைந்திருக்கின்றன.

அன்பானவரே! இன்று, உனக்கு நீயே நற்செய்தி! உன்னை இது காறும் குழப்பிய எதிர்மாறான சிந்தனைகள் சுடுசுடு வார்த்தைகள், படபட செயல்கள் யாவற்றையும் இன்று நிராகரித்து ஒதுக்கிவிடு. "ஐயோ! கடவுளே! இதுவரை எனக்கு ஒன்றுமே சரியாக நடக்கவில்லையே", என அங்கலாய்க்காதே. ஆமாம்! இன்று நீயே உனக்கு இறைவனின் நற்செய்தியாகப் போகிறாய். உன்னைப்பற்றி உனக்கும், நீ சந்திக்கும் ஒவ்வொருவருக்கும் நீ தான் உனது நற்செய்தியைப் பற்றிச் சொல்லப் போகிறாய். இன்று நீ ஒன்றைப் பற்றியும் கவலைப்படக்கூடாது. ஒன்றையுமே சந்தேகிக்கக் கூடாது. மற்றவரைப்பற்றி இலவச தொலைபேசியில் வம்பளப்பது, குறைகூறித் தீர்ப்பளிப்பது யாவற்றையும் இன்று நிறுத்து. உனக்கே இன்று நீ தான் நற்செய்தி.

வேறு யாரோ பரப்பப்போகும் புகழுரையாக இன்று நீ தான் மாறப் போகிறாய். துன்புறும் வேறு எவரோ கேட்பதற்கு ஏங்கிக் கொண்டிருக்கும் உற்சாக-மான தகவல்களையும் நீ தான் உருவாக்கப் போகிறாய். தன்னை ஊக்குவிக்க ஆவலுடன் மற்றொருவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் புன்னகையும் இன்று நீ தான். தனக்கு எப்போ கிடைக்கப் போகிறது என ஒருவர் ஏங்கிக் கொண்டிருக்கும் அந்த வெகுமதியும் நீ தான். இன்று நீயே ஒரு பிரார்த்தனை. ஒரு ஆசீர்வாதம்! ஒன்றுமேயில்லாத வெறும் நிலையிலிருந்து ஏதேனும் ஒன்றை உருவாக்கி எவருக்கோ ஏதோ நல்லதொன்றை இன்று நீ செய்யப்போகிறாய்.

உன் வாழ்வில் உனக்கு ஏற்பட்டிருக்கும் பிரச்சினைகளைப்பற்றி இன்று ஒன்றுமே நீ பேசப் போவதில்லை. "என் ஜீவியத்தில் இது சரியில்லை, அது




சரியில்லை, இத்துன்பத்தை என்னால் தாங்க முடியவில்லையே, எனக் குறைகூறி பிரலாபிக்காதே. உனது நெருக்கடி நிலைவரங்கள், நீ பலிக்கடாவாக்கப்பட்ட உன் கதைகள், முகமூடி நாடகங்கள் யாவற்றையும் மூட்டை கட்டித் தூர வீசிவிடு. தடைகள், துக்கம், தோல்வி, இருள் ஒன்றுமே உனக்கு இனி இல்லை. சுய அலசலின் பின் உன்னை நீயே முற்றாக மாற்றிக் கொள்வதனால் தான் நீயே உனக்கு வெற்றியளிக்கப் போகும் நற்செய்தியாக உருவெடுக்கப் போகிறாய். ஏதோ ஒரு நற்செய்தியைப் பரப்ப, நல்லதைக் கொடுக்க யாருக்கோ நன்மையை இன்று செய்யப்போகிறது நீயே நீ தான். இவ்வாறு நீயே நற்செய்தியாக மாறும் போது, உனது உண்மையான பிரதிபிம்பமாக விளங்கும் நல்லவற்றைத் தான் நீயும் பெற்றுக் கொள்வாய் என்பதை இன்று அறிந்து கொள்.

ஏதோ ஒரு நற்செய்திக்காக இன்றுவரை நீ காத்துக் கொண்டிருந்திருக்க லாம். கெட்ட செய்திகளை மட்டுமே கேட்டுக்கொண்டு, கூடாத தகவல்களை மட்டுமே பரப்பிக்கொண்டு இன்றுவரை வாழ்வில் நீ தேங்கி தடைப்பட்டிருக்கலாம். உன் சிந்தனை, சொல், செயல், மனப்பான்மை, பழக்கவழக்கங்களை மாற்றிக் கொள்வதன் மூலம் உனது வாழ்வின் நற்செய்தியாக நீயே மாறிட இன்று முதல் முயன்று தீவிரமாகச் செயற்படு.

என் வாழ்வின் நற்செய்தி நானே நான்தான் என்பதை இன்று விழிப்புணர்வுடன் புரிந்து கொள்கிறேன்.


மேலதிக தகவல்களிற்கு அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி




# யோகா சோதிடம்

- கிரகப் பொருத்தம் பார்த்தல்
- பலன் பார்த்தல்
- சுபமுகூர்த்தம் கணித்தல்
- சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361



# SMILE

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS

PL. CALL: 905.887.7457 / 905.751.7537

24 hrs, 365 days



# இதயத்தின் இன்னொரு கதவு

13 பக்கத் தொடர்ச்சி

வந்துவிட்டால் என்ன செய்து என்றும் விமானத்தில் பறந்தால் அதன் இறகுகள் உடைந்து விட்டால் என்ன செய்வது என்றும் தேவையற்ற அல்லது நடைமுறைக்குச் சாத்தியம் குறைந்த விடயங்களில் தம்மை உட்படுத்தி அழுவார்கள்.

எங்கள் உயர்வுக்கும் தாழ்வுக்கும் அடிப்படை எமது எண்ணங்கள். அந்த எண்ணங்கள் தரமானதாக அமையும்போது உயர்ந்த எண்ணங்களாகின்றன. எமது உயர்ந்த எண்ணங்கள் சீரான முறையில் பராமரிக்கப்பட வேண்டியது அவசியம். அந்த உயர்வான எண்ணங்களைப் பராமரிப்பதற்கு ஒரேயொரு வழி அவற்றை வார்த்தைகளாக்கி நாள்தோறும் அவற்றைப் பயன்படுத்துவது தான். துரதிஷ்டவசமாக மானிடர்களில் பெரும்பகுதியினர் வார்த்தைகளால் வாழ்வை இழந்து கொண்டிருக்கிறார்கள். அகப்பட்டுக்கொண்ட ஒரு பிரச்சினைகளில் இருந்து தம்மை வெளிக்கொண்டுவர சரியான வார்த்தைகளைக் கண்டு கொள்வதற்கான முயற்சியும் இல்லை. அதற்கான ஆர்வமும் இல்லை. சிலர் பார்வைக்கு மிக அழகானவர்களாகவும் ஏன் அறிவாளிகளாகவும் காட்சியளிப்பர். வாயைத் திறந்தால் வார்த்தைகளின் துர்நாற்றம் எமது செவிப்பறைக்களைக் கருக்கிவிடும். தன்னம்பிக்கை இருத்தல் என்ன விலை என்று கேட்பார்கள். வார்த்தைகளைச் செம்மைப் படுத்துவதன் மூலம் வாழ்வை மாற்றி யமைக்கலாம் என்றால் வாய்விட்டுச் சிரிப்பார்கள். இவர்கள் ஒரு குடும்பத்திற்கோ அல்லது சமூகத்திற்கோ ஆபத்தானவர்கள். ஏனெனில் ஒரு தந்தை இவ்வாறான நிலையில் இருந்தால் அவரது குழந்தைகளும் சுயமாகவே அந்தச் சூழலுக்குள் உள்ளடங்கிவிடுவார்கள். நாளடைவில் அவர்கள் வார்த்தைகளும் நாற்றமடையத் தொடங்கிவிடும்.

மற்றவர்களை தங்கள் பக்கம் கவருவதற்கு வார்த்தைகளைப் பல்வேறு கோணங்களில் பயன்படுத்தும் வார்த்தை ஜாலங்கள் வாழ்விற்கு வெற்றி கண்டதில்லை என்பது வரலாற்று உண்மை. நீங்கள் ஒருவரையும் கவரமுடியாது. மாறாக நீங்கள் மற்றவர்களால் கவரப்படவேண்டும். அதற்கு ஒரேவழி தூய்மையான உள்ளத்து வார்த்தைகள் தான். இங்கே இன்னொரு முக்கியமான விடயத்தைக் கவனிக்க வேண்டும். உங்கள் உள்ளத்தூய்மைக்கும் வார்த்தைகள் தான் அத்திவாரம்.

வாசகர்களே! ஒவ்வொருவரது எதிர்பார்ப்பும் எதிர்காலம் வளமுள்ளதாக அமையவேண்டும் என்பதே. எதிர்காலம் எதிர்பார்ப்புக்களின் கோட்டை. எதை எதிர்பார்க்கிறோமோ அதை நாம் அடைந்தே தீருவோம். இந்த எதிர்பார்ப்புக்களின் பெறு பேறுகள் உங்களின் வார்த்தைகளால் அடித்தளம் இடப்படவேண்டும். ஏனெனில் வார்த்தைகளை விட வலிமையான சாதனம் எதுவுமேயில்லை. எதிர்காலத்தை நிகழ்காலமாக்கும் வலிமைதான் வார்த்தைகள்.

மகிழ்ச்சியாக வாழ்வதற்கு வார்த்தைகளின் உபயோகம் அடிப்படை என்பதை மறந்துவிடாதீர்கள். கடனில் மூழ்கி இருக்கும் ஒருவர் நாள்தோறும் கடன்கடன் என்று அழுது கொண்டிருந்தால் கடனாளியாகத்தான் காலத்தை முடிப்பார். நோயாளிகள் நோயைப்பற்றி சதா அழுது கொண்டிருந்தால் ஆயுட்காலம் குறுகி விடும். என்னமோ செய்கிறது என்று சிலர் தமது நோயைக் கூட அடையாளங்காண முடியாமல் அவதிப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்கள் இல்லாத ஒரு நோய்க்கு அடிமைப்பட்டு இருப்பார் கள். காரணம் இவர்களது வார்த்தைகள்.

வாசகர்களே! வார்த்தைகளை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் என்று கேட்கிறீர்களா? இவ்வாறுதான். எது உங்களிடம் இருக்கிறதோ ஆனால் அது உங்களுக்குத் தேவையில்லையோ அதைப் பற்றிக் கதைக்காமல் இருப்பதும் எது உங்களிடம் இல்லையோ ஆனால் அது தேவையாக இருக்கிறதோ அதைப்பற்றிக் கதைப்பதுதான். உதாரணமாக உங்களது கடன் அளவு கட்டுக்கடங்காமல் இருப்பதாக எடுத்துக் கொள்வோம். இந்த நிலையில் இருந்து வெளிவர வேண்டும் என்பது தான் உங்கள் நோக்கம். அதற்கு வருமானத்தின் அளவு அதிகரிக்கப்பட வேண்டும் என்பது வெளிப்படை. இங்கே கடன் உங்களிடம் இருக்கிறது. ஆனால் அது உங்களுக்குத் தேவையில்லாதது. அதிக வருமானம் உங்களிடம் இல்லை. ஆனால் அதுதான், உங்களுக்குத் தேவைப்படுவது. எனவே கடனைப்பற்றிக் கதைக்காமல் வருமான அதிகரிப்பை பற்றிக்கதையுங்கள். வார்த்தை களால் எதிர்காலத்தை நிகழ்காலத்தில் கூறுங்கள். எனது எல்லாக் கடன்களும் வருமான அதிகரிப்பால் அடைக்கப்படுகின்றன. நான் கடனில்லாத வாழ்வு வாழ்கிறேன் என்று தினமும் கூறுங்கள். அதன் விளைவு உங்களை அதிசயிக்கவைக்கும். இது எனது அனுபவ உண்மை.

தரமானதும், முற்போக்குச் சிந்தனையும் கொண்ட வார்த்தைகளின் பிரயோகம் படிப்படியாக உங்கள் உள்ளத்தில் ஒரு தூய்மையை ஏற்படுத்தும். தூய்மையான உள்ளம் படைத்தவர்கள் ஞானிகள் மட்டுமல்ல. நாங்களும் தான். கனிவான வார்த்தைகள் கடல்கடந்து கண்டங்கள் பல பாய்ந்து அதைக் கேட்பவரை உங்கள் பக்கம் திருப்பிவிடும். அன்பும், கனிவும் நிறைந்த நேர்த்தியான வார்த்தைகள் ஒலிவடிவம், பெற்ற உங்கள் உள்ளத்தின் கதவாகட்டும். திறந்துவிடுங்கள். அதனால் நீங்கள் மட்டுமல்ல உங்களால் அறியப்பட்டவர்களும், அறியப்படாத பலகோடி மக்களும் நன்மையடையட்டும்.


ROYAL HEALTH & NUTRITION CENTER

இலங்கை, இந்தியா, மாலைதீவு போன்ற நாடுகளில் மருத்துவராக தொழில் புரிந்த டாக்டர் விஸ்வா அவர்களின் ஹோமியோபதி, மூலிகை, சத்துள்ள உணவு போன்ற முறைகளால் பல நீண்ட கால நோய்கள், கொடிய வியாதிகளுக்கு சிகிச்சை அளிக்கிறார்.

Dr. Viswa, renowned in alternative medicines specializing homeopathy, herbal and nutritional medicines for acute and chronic diseases.

Served as a medical officer for Govt. hospital service of Maldives and general practitioner in India and Sri lanka for 12 years.

இலவச ஆலோசனைகளுக்கு - 416.266.8581/647.839.2421



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

*தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.*

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(17 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON








நகைச்சுவைத் தொடர் 143



# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்




மொட்டைக்கறுப்பன், பொன்னி, சம்பா, குத்தரிசி, பசுமதி என அரிசியிலேயே தினம்தினம் மாறுதலை விரும்பும் மக்கள் அரசியலில், மாற்றத்தை விரும்பமாட்டினமே? முருகேசு என அளந்து கொண்டு போனார் உலகர். உலகரும் முருகேசரும் ரெலிபோனில் மணிக்கணக்காக கதைத்துக்கொண்டிருந்தனர்.



செக்கண்புளோர் செல்லம்மா இரகசியமாக ஆட்டிலறி அன்னம்மாவிடம் கேட்டா அன்னம்மாக்கா;

'காப்பர் (Happer) எங்களைக் காப்பரோ?' என்று சிரித்தபடி கேட்டா. உலகர் மெதுவாக திரும்பிப்பார்த்தார்.

திருமணத்தில் தாலி கட்டுவதும் தேர்தலில் வாக்களிப்பதும் கிட்டத்தட்ட ஒன்றுதான். டே கெயர் கிடைக்குமா, பென்சன் கூடுமா, பாடசாலைகளில் நடைபெறும் அடிபிடி, சண்டை, துவக்குசூடு நிறுத்துவர்களா, எமது நாட்டுப்பிரச்சினை தீர உதவுவார்களா என பற்பல கோணத்தில் நிவர்த்தி செய்யவேண்டும் என நினைத்துதான் வாக்களித்தனர். திருமணமும் அப்படித்தான். பற்பல எண்ணங்களை வைத்து பல கற்பனையில் திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆனால் கோரிக்கைகளும் திட்டங்களும் நிறைவேறா விட்டால்...


நாடாளுமன்றம் கலைக்கப்படுகிறது. புதிய தேர்தலுக்கு மக்களின் வரிப்பணம் செலவிடப்படுகிறது. ஆனால் திருமணம் செய்தபின் கற்பனைகள் ஆசைகள் நிறைவேறாத பட்சத்தில் வாழ்க்கை முறிவு சில விவகாரத்தில் முடிகின்றன. சிலர் இனியென்ன வாழும்வரை வாழுவோம் என சமாளித்து செல்கின்றனர்.


வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடல்...
வாழ நினைத்தால் வாழலாம், வழியா இல்லை பூமியில்...



உலகர் மனதில் எல்லாம் கற்பனையில் தோன்றி மறைந்தது. இதேவேளை பிறிம்லி மீனாவின் மகன் மதன் ஏதோ சிறிய படத்துடன் வந்தான்.



காதலர் தினம் அமளிதுமளி. வலன்ரைன் டே ஸ்கூல்லை நடந்தது உலகப்பு. நான் ஒரு சினேகிதிக்கு றோசாப்பூ கொடுத்தனான் என்றான்.



கண்டறியாத காதலர் தினம். உன்ரை வயதென்னடா என உறுமினா ஆட்டிலறி அன்னம்மா. ரூபனும், ரூபியும் தமக்குள் சிரித்துக் கொண்டனர். எத்தனை காதலர் தினம் காத்துக்கிடந்தனர்.






காதல் கைகூட இராமன் ஜனகனின் வில்லை வளைத்து சீதையை தன் பிராட்டியாக்கியது இராமனின் காதல்.
சீதையை இராவணன் கவர்ந்து சென்றதும், இராவணன் சீதை மீது கொண்ட காதல்.
மாதவியின் கண் பார்வையால் கோவலன் கண்ணகியைப் பிரிந்ததும், மாதவியின்மேல் கொண்ட காதல்.



கோவலன் பாண்டிய மன்னனால் தலைதுண்டிக்கப்பட்டது,
கண்ணகி மதுரையை எரித்தது கண்ணகி கோவலன் மேல் கொண்ட காதல்.
இளவரசி டயானா செல்வத்தின் மேல் திளைக்க வேண்டியவர் இறப்புக்கு காரணம் காதல்.
அம்பிகாவதி அமராவதி காதல் காவியமானது.
மும்தாஜ் மேல் சார்ஜகான் கொண்ட காதல் காதலுக்கே நினைவுச் சின்னமான தாஜ்மகால் ஆனது.



றோமியோ யூலியற் காதல் மரணத்தில் முடிந்தது.
காதல், காதல், காதல் இன்றேல்???

உலகண்ணை இப்ப இன்ரநெற், ஈமெயில், மோல், பள்ளிக்கூட ஹோல் அங்க இங்க கண்டநிண்ட இடமெல்லாம் காதல். ஆனால் அந்தக்காலம் என சொல்லி சிரித்தா செக்கண்புளோர் செல்லம்மா. அன்று அன்றுதான் இன்று இன்றுதான்.
அந்தக்காலம் என செல்லம்மா கூறியது பல அர்த்தத்தை கிளறியது. ஆணுக்கு வேறு பள்ளிக்கூடம், பெண்ணுக்கு வேறு பள்ளிக்கூடம். ஆண்கள் வேறு பெண்கள் வேறு கடைக்கண்ணால் பார்த்தாலே காலடித்து முறிப்பேன் என்பார்கள்.
திருவிழாக்கள், திருமணவீடுகள் அப்பிடி இப்பிடியென ஏதாவது நிகழ்ச்சிகளில்தான் ஏதோ பார்க்க கதைக்க சந்தர்ப்பம் கிடைக்கும்.
காதலர்க்கு ஒரு தினம்!

திருமணமானபின் தான் பெண் ஆணையும், ஆண் பெண்ணையும் பார்க்கலாம். திருமணத்தின் பின்தான் கணவன் மனைவி காதலிக்க ஆரம்பிக்கிறார்கள்.




இஞ்சருங்கோ, இஞ்சருங்கோ...
அத்தான் என்னத்தான் எப்படிச்சொல்வேனடி...
அந்த வாழ்க்கையில் சுவை கண்டவர்களுக்கு இன்றைய தலைமுறையின் வாழ்க்கைமுறையை நினைத்தாலே சிரிப்பாக இருக்கிறது. அப்பா, அம்மா உறவினர்கள் எடுத்ததற்கெல்லாம் கோபிக்கிறார்கள்.
ஓல்ட் பீப்பிள் என சிரிக்கும் சிரித்த இளைய தலைமுறை திருமணமாகி முப்பது நாளுக்கிடையிலேயே கோபிக்கலாம், சண்டைப் பிடிக்காமல், விவாதமிடாமல், வாழ்க்கை நடாத்துகிறார்களா? அந்த வேளையில் அவர்கள் குறிப்பிட்ட ஓல்ட் பீப்பிள் வாழ்க்கையை நினைத்து இளையதலைமுறை நிச்சயம் ஒரு நிமிடமாவது சந்தோசப்படுவர்.
எப்படி வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என இளைய தலைமுறை அவர்கள் வாழ்ந்த முறையை அறிய விரும்புகிறார்கள்.

அதேவேளை அந்த ஓல்ட் பீப்பிள் இருப்பார்களா?
உலகண்ணை வலன்ரையன் டேக்கு ராசம்மாக்காக்கு என்ன குடுத்தனீங்கள் என கேட்டார்? சிரித்துக்கொண்டே தேநீரைக் கொண்டுவந்தா ராசாம்மா.


# HOUSE FOR SALE



## MIDDLEFIELD & FINCH

## 435 Middlefield Road

- 3 bedrooms
- 3 washrooms
- Huge basement
- Living room
- Storage room
- Central A/C
- **All Appliances included**
- Close to Mall, medical, temple & school, park, 24 hour TTC, etc.

**Location, Location! Must See. A1 Condition!**

- *2 Yrs Old Condo/Th.*
- *Central air conditioning*
- *Brick exterior finish*
- *Unfinished huge basement.*
- *Rough in 3Pc In Basement*
- *Huge Master Bdrm (12'X23').*
- *Walk out to Deck*
- *Cable In All Rooms & Bsmt.*
- *Circular Oak Staircase*
- *Incl: B/I Dishwasher, Laundry In Basement, California Shutters.*
- *Garage: attached, second Parking space with opener*

## Sale by owner

**Price: $279,900**

**Pl. call:** 416.297.8469 / 647.393.8326

Website - www.simpleteck.com/home

*E.T - The extra terrestrial AI- Artifical Intelligence* என்ற வித்தியாசமான உருவகங்களை வெளிப்படுத்திய விஞ்ஞான புனை படங்களை எடுத்தவர் Steven Spielberg. இவர் புனை கதைகளை மாத்திரமல்ல உயிரோட்டமான நடைமுறை வாழ்க்கை சம்பவங்களையும் படமாக்கியுள்ளார். 1993ஆம் ஆண்டு Schindler's List என்ற யூத இனப்படுகொலை பற்றிய சம்பவங்களை பதிவாக்கியுள்ளார். அதேபோன்று Amistad (1997) கறுப்பு இன மக்கள் 1800 களில் அமெரிக்காவில் பட்ட இன்னல்களை படம்பிடித்து காட்டியுள்ளார்.

Saving Prirate Ryan (1993) The Colour Purple (1985) போன்ற சுமார் 40க்கும் மேற்பட்ட படங்களை இயக்கியுள்ளார். சுமார் 100க்கும் மேற்பட்ட படங்களின் படைப்பாளர். ஓர் எடிட்டர், நடிகர் என பல்வேறு பரிமாணங்களை திரைப்படங்களில் வெளிப்படுத்தியவர். இவரது Jurassic Park படம் குழந்தைகள் முதல் வயது முதிர்ந்தவர் வரை ரசித்து பார்த்த படம்.



பிறப்பில் யூதரான இவர் அமெரிக்காவில் Ohio மாகாணத்தில் உள்ள Cincinnati என்ற நகரத்தில் 1946 ஆம் ஆண்டு மார்கழிமாதம் 18ஆம் நாள் பிறந்தார். உலகின் மிக குறிப்பிடத்தக்க அரசியல் இயக்குனர்களில் இவரும் ஒருவர். Oliver Stone போல் தனித்து அரசியல் விமர்சனங்களுடன் நின்றுவிடாமல் விஞ்ஞான புனை கதை போன்ற பலவிடயங்களை படமாக்கியுள்ளார்.

இவரது நெறியாள்கையில் வந்துள்ள படமே Munich. இப்படம் September 05,1972 Munich ஒலிம்பிக்ஸ் அரங்கிலிருந்த இஸ்ரேலிய வீரர்களை கடத்தி கொன்ற பின்னர் இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளைப் பற்றியது.

இவரது அடுத்த படமும் சற்று சர்ச்சையை வெளிப்படுத்தும் Time of Rival. இப்படம் முன்னாள் அமெரிக்க அதிபர் ஆபிரகாம் லிங்கனைப்பற்றிய பதிவைக் கொண்டு வெளிவரவுள்ளது.

Munich படம் பல மேற்கத்தைய விமர்சகர்களின் கண்டனத்துக்குள்ளாகியுள்ளது. அதற்கான காரணம் அதில் சொல்லப்பட்டுள்ள விடயங்களே. படம் பற்றிய விபரங்களை பார்ப்பதற்கு முன்னர் சில விடயங்களை பற்றி குறிப்பிடுவது நல்லது.

• இப்படம் George Jonas என்ற எழுத்தாளரின் *Vengeance; The true store of an israeli counter terrorist team* என்ற நூலை மையமாகக் கொண்டுள்ளது. ஏற்கனவே இந்த நாவலை மையமாகக் கொண்டு Sword of Gideon என்ற படம் பல ஆண்டுகளுக்கு முன்பு வெளிவந்துள்ளது. (1986 TV). George Jonas Hungary நாட்டில் 1935 ஆம் ஆண்டு பிறந்தவர். 1956 ஆம் ஆண்டு கனடாவிற்கு வந்த இவர் CBC இல் தயாரிப்பாளராக சுமார் 14 ஆண்டுகள் கடமையாற்றியுள்ளார். தற்பொழுது ஒரு சுயாதீன பத்திரிகையாளராக National Post, Macleans போன்ற பத்திரிகைகளுக்கு கட்டுரைகள் எழுதி வருகின்றார். இவர் தனது நூலை Steven Spielberg சிதைத்து விட்டார் என்ற குற்றச்சாட்டை Macleans சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்ததாக Black September Organization. இது 1970 ஆம் ஆண்டு palastinion Fedayeen என்ற அமைப்பினரால் உருவாக்கப்பட்டது. ஜோர்டானின் அரசர் Hussein இராணுவ சட்டத்தை உருவாக்கி தனது

# MUNICH



நாட்டில் உள்ள பாலஸ்தீனியர்களை வெளியேற்றியதுக்கு எதிராக உருவாக்கப்பட்டது.

November 28, 1971 ஜோர்டான் பிரதமமந்திரி Wasifi Tel இன் கொலை உட்பட்ட பல நடவடிக்கைகளுக்கு காரணமாக இருந்தது இந்த அமைப்பு. இவர்களே Munich Olympics நகரிலிருந்து சுமார் 11 இஸ்ரேலிய வீரர்களை அதிகாலை நாலுமணிக்கு ஆறடி உயரமான வேலியை தாண்டிச் சென்று கடத்தியுள்ளனர். இருவரை அவ்விடத்திலும் மிகுதியினரை செல்லும் வழியிலும் கொன்றுள்ளனர். சுமார் 21 மணித்தியாலங்கள் இடம் பெற்றது இச்சம்வம்.

இதன் பின்னர் இஸ்ரேல் இதற்கு காரணமாக இருந்தவர்களை ஒவ்வொருவராகக் கொன்றது.

1936 ஆம் ஆண்டு கிட்லர் நடத்திய ஒலிம்பிக்கின் பின்னர் ஜேர்மனியில் நடைபெற்ற Olympics இது. எனவே இது ஜேர்மனிக்கு முக்கியமான ஒரு நிகழ்வாகும். சரித்திரபூர்வமான இந்நிகழ்வில் இடம்பெற்ற இச்சம்பவத்தின் பின்னரும் தொடர்ந்து ஒலிம்பிக் போட்டிகள் Munich நகரில் தொடர்ந்து நடைபெற்றன. கொடிகள் மாத்திரம் அரைக்கப்பத்தில் பறக்கவிடப்பட்டன.

அப்போதைய இஸ்ரேலிய பெண்பிரமத மந்திரி Goldameir துணிச்சலாக தனது அமைச்சரவை சகாக்களுடன் இணைந்து "Committee-X" என்ற ரகசிய அமைப்பு மூலம் நடவடிக்கைகளில் இறங்கினார்.

Plo தலைவர் யாசீர் அரபாத் தனக்கும், இந்த நடவடிக்கைகளுக்கும் உள்ள போலித்தூரமொன்றை வெளிப்படுத்தவே BSO என்ற பெயரை வைத்தார். அதைவிட இவர்களது நடவடிக்கைகளின் தீவிரத்தை அறிந்தே Goldameir "Committee-X" தாபித்தார். இக்குழுவில் பாதுகாப்பு அமைச்சர் Moshe Dayan, மொசாட் தலைவர் Zini Zamir போன்றோர் அங்கம் வகித்தனர். எனினும் "Committee - X" இன் நடவடிக்கைகள் எதுவும் மொசாட்டிக்கு தெரிந்திருக்கவில்லை. இதற்கான நடவடிக்கை குழுவை மேற்பார்வை செய்ய Mike Harai நியமிக்கப்பட்டார். இவர் பல நடவடிக்கை குழுக் களை நியமித்தார். இவை இரு விதமானவை.

1. மொசாட்டின் நடவடிக்கைகளை ஒத்தவை. ஓரளவுக்கு கட்டுப்பாட்டில் உள்ளவை. இரண்டாவது மிகச் சிறந்த பயிற்சி பெற்ற வீரர்களை அதேசமயம் சுயாதீனமானவர்களைக் கொண்டது. இவர்களிடம் அதிகளவு பணமும் வழங்கப்பட்டது. முதலாவது குழுவை விட இரண்டாவதே வெற்றி வாகை சூடியது. இவர்கள் ரகசியங்களை வழங்குவோரை விலைக்கு வாங்கினார்கள்.

இரண்டாவது குழுவின் ஒரு குழுத்தலைவரே Avner. இவர் மொசாட் அங்கத்தவர். மொசாட்டிலிருந்து உடனடியாக ராஜினாமாச் செய்யவைக்கப்பட்டார். இவரது குடும்பத்துக்கும், இவருக்கும் மாதா மாதம் பணம் வழங்கப்பட்டது. இந்தத் தாக்குதல்கள் முடிந்த பின்னர் இவர்களுக்கென ஒரு தொகை பணமும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது.

Avner, Le Group என்ற இரகசிய விடயங்களை வழங்கும் தாபனத்தை நாடினார். இதன் உறுப்பினர் Louis. இவரது தந்தை PAPA. இவ் அமைப்பின் தாபகர். இவர் இரண்டாம் உலகப்போரில் பிரெஞ் ராணுவத்தில் கடமையாற்றியவர். இவர்களது தாரக மந்திரமே நாங்கள் யாவரையும் விரும்புவதில் யாரையும் வெறுப்பதில்லை.

Salameh ஐ கொல்ல மொசாட்டால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை தோல்வியில் முடிந்தவுடன், சுமார் ஆறு அதிகாரிகள் கைது செய்யப்பட்டார்கள். இதற்கான முக்கிய காரணம் ஒவ்வொரு நடவடிக்கையையும் பலரால் தீர்மானிக்கப்பட்டது என குற்றஞ்சாட்டினார் மிக முக்கிய இஸ்ரேலிய அதிகாரி. ஆனால் Avner இன் குழு சுயாதீனமாக இயங்கியமையால் பல வெற்றிகளை பெற்றது.

## Avner உன் குழு கொன்றொழித்தோர்.

1. Wael Zwraite - அரபாத்தின் ஒன்று விட்ட சகோதரர் - ஐரோப்பாவில் பாலஸ்தீனிய நடவடிக்கைகளுக்கு காரணகர்த்தா. கொலை - ஒக்ரோபர் 16, 1972, இடம் - Rome, Italy, தகவல் - Baader Meinhof

2. Mah - Hamshari - Munich ஒலிம்பிக் சம்பவத்துக்கு ஒருங்கிணைப்பாளர். கொலை- டிசம்பர் 08, 1972, இடம்-பாரிஸ்,தகவல்-LE Group

3. ABAD - AL CHIR - Plo Contact with KGB in Cyprus. கொலை - ஜனவரி 24, 1973, இடம் - Nicosit, Cyprus, தகவல் - Le Group

4. De Basil - Al Kubaisi - பாலஸ்தீனிய அமைப்பின் BSO முக்கியஸ்தர். கொலை - ஏப்ரல் 06, 1973, இடம்-பாரிஸ், தகவல்- Le Group

5. Ziad Muchassi -பாலஸ்தீனிய முக்கிய அதிகாரி. கொலை ஏப்ரல் 12, 1973, இடம் - Athens, Greecs, தகவல் - Le Group

6. Moh. Boudia -ஐரோப்பிய பாலஸ்தீனிய அதிகாரி. கொலை - யூன் 28, 1973, இடம் - பாரிஸ், பிரான்ஸ், தகவல் - Le Group

7. Ali Salameh - பாலஸ்தீனிய இராணுவ அமைப்பாளர். கொலை - ஜனவரி 12, 1974, இடம்-Sargans, Switzerland, தகவல் - Le Group

8. பெண் ரகசிய கொலையாளி _ Avner இன் குழுஉறுப்பினரின் கொலைக்கு காரணகர்த்தா Le Grup இன் தகவலின் பேரில் Hoorn நெதர்லாந்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டார். ஓகஸ்ட் 21, 1974.

இவர்களது பிரதான குறியாக இருந்த அனைவரும் (BSO இனதும் Munich ஒலிம்பிக்கினதும் நடவடிக்கைகளினது பிரதான காரணகர்த்தாக்கள்) சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இந்த நடவடிக்கைகளின் மையமாகக் கொண்டதே Munich.

Steven Spilberg இப்படத்தில் இஸ்ரேலின் பயங்கரவாத நடவடிக்கைகளையும், அது எவ்வாறு இதனை செய்துள்ளது என்பதனையும் விமர்சித்துள்ளார். ஒரு யூதராக இருந்த பொழுதும் ஒரு பக்கம் சாராது விமர்சித்துள்ளார்.



**வானரன்**

Munich சம்பவம் அமெரிக்க உளவாளிகள் அமைப்பான CIA க்கு முன் கூட்டியே தெரியும். இவர்களுக்கு BSO இன் Balameh க்கும் தொடர்புகள் இருந்தன போன்ற விடயங்கள் சாதாரண மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்படுகின்றன. மறுபுறம் Avner போன்றவர்களின் வாழ்வு ஒன்றுமே செய்ய முடியாமல் 'அந்த இயந்திரத்துக்குள் அகப்பட்டவர்கள் தப்பமுடியாமல் போய்விடுவார்கள்' என காட்டப்பட்டுள்ளது. ஒருவகையில் இதுவும் ஒரு அரசியல் மாபியாவே. பணம் இங்கு பிரதான காரணகர்த்தாவாக விளையாடுகிறது. தகவல்களைப் பேரம்பேசவும் சுயாதீன வாழ்வுக்கும் பலவாறு உதவுகிறது.

